# யாருக்கு மாலை?

## 1

"என்னது? அம்மாவிடம் சொல்லப் போகிறாயா? சொல்லேன் தாராளமாகச் சொல்லிக்கொள். அம்மாவிடம் மட்டுமென்ன? அண்ணன், அப்பா, அத்தான் என்று ஒருவரையும் விட்டு விடாமல், ஒட்டு மொத்தமாய் அத்தனை பேரிடமும் சொல்வதானாலும் சொல்லிக்கொள். எனக்கு ஒன்றும் பயமில்லை. யாரைப் பற்றியும் நான் கவலைப்படவும் போவது இல்லை. நான் சொன்னால் சொன்னதுதான்'' என்றாள் மாதங்கினி அழுத்தம் திருத்தமாக.

அழகிய செவ்விதழ்கள் பிடிவாதமாய் அழுந்த, விறைப்புடன் தலையைத் தூக்கிக் கொண்டு நின்ற தங்கையை நோக்கிய மந்தாகினிக்குத் தலையில் அடித்துக் கொள்ளலாம்போல இருந்தது.

''என்னத்தையடி சொல்லிக் கிழித்தாய்? முட்டாள்!'' என்றாள் எரிச்சலுடன். ''ஒரு நல்லவாழ்வு, ஓர் ஒளிமயமான எதிர்காலம், என்னைவிடப் பத்து மடங்கு வளமான வாழ்க்கை-எண்ணிப்பார்த்தால் எனக்கே கொஞ்சம் பொறாமையாகத்தான் இருக்கிறது. அப்படி ஒரு சிறப்பான இடம் உனக்கு அமையப் போகிறது என்கிறேன்.

புத்தி கெட்டத்தனமாக அதைத் தட்டிக் கவிழ்ப்பேன் என்கிறாயே!'' என்று ஆத்திரத்துடன் படபடத்தாள்.

அவளைவிட அதிகக் கோபத்துடன் தங்கை குறுக்கிட்டாள். ''ஏபிசிடி கூடத் தெரியாத விஷயத்தைப் பற்றிப் பெரிதாக அளக்க வந்து விட்டாயே! இதைப் பற்றி உனக்கு என்ன தெரியும்? பெருமாள் மாடு மாதிரி, அம்மா அப்பா சொன்ன பேச்சுக்குத் தலையை ஆட்டித் தாலியை வாங்கிக் கொண்டவள் நீ'' என்றாள் இளக்காரமாக.

''அதனால் நான் என்ன கெட்டுப் போய்விட்டேனாம்? உன் அத்தான் மாதிரி ஓர் அன்பான கணவர் கிடைக்க எத்தனையோ பிறவிகளில் தவம் செய்திருக்க வேண்டும். மாது நீ சின்னப் பெண். இதெல்லாம் ஒன்றும் புரியாது...''

''ஆமாமாம். சொல்லத் தெரியவில்லை என்றால் சின்னப்பெண், திருமணம் என்றால் மட்டும் பெரியவள் ஆகிவிடுவேனாக்கும்? சும்மாவேனும் எனக்குப் புரியாது கிரியாது என்பானேன்?

''அடடே...ஓகோ! பாட்டி ஒரு பழமொழி சொல்லுவார்களே, சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும் என்று அதுபோல, உன்னிடம் சொல்வதற்குச் சங்கதி இல்லாததால் இப்படியெல்லாம் கூறிச் சமாளிக்கிறாயா, அக்கா?'' என்று கேலியாகக் கேட்டு உதட்டைப் பிதுக்கினாள் தங்கை.

''அட, மூடுடி வாயை. அத்தான் என்னிடம் எவ்வளவு அன்பாக இருக்கிறார் என்று தெரிந்தும் இப்படிப் பேசுகிறாயா? என் பிறந்த நாளுக்கு மரகதம் பதித்த மோதிரம் வாங்கித் தந்தார். போன மாதம், பிரிண்டட் மைசூர் கிரேப் கேட்டேன். உடனே வாங்கிக் கொடுத்து விட்டார்'' என்று ரோஷத்தோடு அடுக்கியவளை மாதங்கினி இடைமறித்தாள்.



''இதென்ன பெரிய விஷயம்? நீ காலையில் எழுந்ததில் இருந்து அவருக்கு அது பிடிக்கும் அவருக்கு இது பிடிக்கும் என்று மாய்ந்து மாய்ந்து செய்கிறாய்; அவர் அதற்குப் பிரதி உபகாரமாய் இதெல்லாம் வாங்கித் தருகிறார். இதற்கு அது என்று சும்மா உபயோகமாய் ஒரு பண்டமாற்று விவகாரம்தானே இங்கு நடப்பது?'' என்றாள் அலட்சியமாக.

''பண்டமாற்றமா? மண்ணாங்கட்டி. உன் மண்டைக்குள் மூளைக்குப் பதிலாக களிமண்தான் அடைத்துக் கொண்டு இருக்கிறது என்று நினைக்கிறேன். உன் அத்தானும் நானும் ஒருவரை ஒருவர் எவ்வளவு நேசிக்கிறோம் என்று தெரிந்த பிறகும் இப்படிப் பேசுகிறாயே! அவரவர் உயிர் கூட அடுத்தவருக்கு மூன் தூசுதான் தெரியுமா?'' என்று உணர்ச்சியோடு உரைத்தாள் மந்தாகினி.

தமக்கையின் உணர்ச்சிகரமான பேச்சைச் சற்றும் மதியாமல் தோளைக் குலுக்கினாள் தங்கை. ''சும்மா வசனம் பேசாதே, அக்கா. உன் திருமணத்தின்போது உனக்கு எவ்வளவு நகை போட்டார்கள் என்று எனக்குத் தெரியும். எவ்வளவு பணம் - சட்டப்படி வரதட்சணை வாங்குவது தப்பு என்றாலும்கூட, அதையும் வாங்கிக் கொண்டுதானே அத்தான் தாலியை உன் கழுத்தில் கட்டினார்? இதில் நேசம், காதல் என்பதற்கெல்லாம் எங்கே இடம் இருக்கிறது?''

பதில் சொல்ல மாட்டாமல் சற்றுத் திகைத்துவிட்டு, ''ஆனால் அந்த நகைகள் என்னிடம்தான் இருக்கின்றன. பணம் என் பெயரில்தான் தொழிலில் பங்குகளாக மாறியிருக்கிறது'' என்றாள் தமக்கை.

''இருந்தால் மட்டும்? உன் நகைகளை உன் விருப்பம்போல யாருக்காவது கொடுக்க முடியுமா?

தொழிலில், உன் பங்கு வருமானம் என்று உன் கையில் கொடுத்து விடுகிறார்களா? இல்லை, அந்தப் பங்குகளைத்தான் உன் இஷ்டப்படி நீ கையாள முடியுமா? அந்த உரிமை இல்லாதபோது இது எல்லாம் காசு பணம் கொடுக்கல் வாங்கல் விவகாரம்தானே தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆனால் என் தமிழ்தாசன் என்ன சொல்லுகிறார் தெரியுமா?'கழுத்தில், காதில், கையில் என்று இப்போது அணிந்திருக்கும் நகைகளைக்கூடக் கழற்றிக் கொடுத்துவிட்டுக் கட்டிய சேலையோடு வா, போதும்' என்கிறார்.''

''நல்ல வேளை! அதையும் கழற்றிக் கொடுத்துவிட்டு வா என்று சொல்லாமல் விட்டானே!'' என்று கோபத்துடன் முணுமுணுத்தாள் மந்தாகினி.

''என்னது? என்ன சொல்கிறாய்?'' என்று புரியாமல் தங்கை கேட்கவும், ''ஒ...ஒன்றுமில்லை. அப்புறம் என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டேன்'' என்று சமாளித்தாள் அவள். பதிலாக, ''திருமணம் செய்து கொள்வோம்'' என்று உற்சாகத்தோடு உரைத்தாள் சின்னவள்.

''அதன் பிறகு என்னடி செய்வீர்கள்? சீனு...இல்லை... என்னமோ தாசன் கீசன் என்றாயே, அவனே அவனுடைய சினேகிதன் அறையில் ஒண்டுக் குடித்தனம் இருக்கிறான். திருமணம் செய்து கொண்டு வானமே கூரை. வீதியே வீடு என்று வாழப்போகிறீர்களா? 'பூவா'வுக்கு என்ன செய்வதாக உத்தேசம். ஈரத் துணியை வயிற்றில் கட்டிக் கொள்வீர்களா?''

ஆத்திரத்துடன் அக்காவை உறுத்து விழித்தாள் மாதங்கினி. ''சே. பணம் பணம் என்று ஏனக்கா நீங்கள் எல்லோரும் இப்படிப் பறக்கிறீர்கள்? ஒன்று தெரியுமா?''



என்றவளின் கோபக் குரல் இறங்கி இனிமையாய் இழைய, ''என் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாலே பசிதாகம் போய்விடும் என்கிறார், அவர்'' என்று கிளியாய் மிழற்றினாள்.

''ஓகோ! நீங்கள் எப்படியாம்? சிக்கன் பிரியாணி என்றால் அந்த மொக்கு மொக்குகிறவள்!'' என்றாள் மந்தாகினி பரிகாசமாக.

சற்றுத் திகைத்துவிட்டு, சிறுயோசனையின் பின், ''நான் ஒன்றும் இப்போதெல்லாம் மொக்குவது இல்லை. இடுப்பு தடித்துவிடும் என்று, அளவோடுதான் உண்கிறேனாக்கும்'' என்றாள் மாதங்கினி ரோஷத்தோடு. ''சால்ட், முட்டை என்று முடிந்த அளவு கொழுப்புச் சத்து இல்லாததாய்ப் பார்த்துதான் சாப்பிடுகிறேன், தெரியுமா?''

இப்போது மந்தாகினி, மெய்யாகவே தலையில் அடித்துக் கொண்டாள். ''நான் அதையாடி சொன்னேன்? உன் உடம்பு மெலிவதும் குண்டாவதுமா இப்போது பிரச்சினை? அந்த 'சால்'டும் முட்டையும் வாங்கப் பணத்துக்கு என்ன செய்யப் போகிறீர்கள்? அதைச் சொல்லு'' அலுப்பும் சலிப்புமாகத் தங்கையிடம் கேட்டாள்.

''தாராளமாய்ச் சொல்லுகிறேன்.'' என்றாள் மாதங்கினி சற்றும் கலங்காமல்.

மிகுந்த தன்னம்பிக்கையோடு மாதங்கினி தன் தமக்கையிடம் சொன்னது இதுதான். தன் கவிதைகள் மூலம் திரை உலகில் சீக்கிரமே ஒருநாள் தமிழ்தாசன் கொடி கட்டிப் பறக்கப் போகிறானாம். அப்போது இந்தப் பத்து மடங்கைப்போல இன்னும் பத்து மடங்கு வளமான வாழ்க்கை வாழப் போகிறாளாம்...

''அந்த 'ஒருநாள்' அதுதான் 'சீக்கிரமே ஒருநாள்' என்றாயே, அந்த நாள் எப்போது வரப் போகிறது

என்பதையும் மரத்தடி ஜோசியக்காரன் சொல்லி யிருப்பானே, 'சரியாக ஒன்பது மணி நேரத்தில் அல்லது ஒன்பது நாளில் அல்லது ஒன்பது மாதத்தில் அல்லது ஒன்பது வருடங்களில் என்று கரெக்டாக அந்த நல்ல காலம் வந்து உன் வீட்டுக் கதவைத் தட்டாவிட்டால், அப்போது என்னை வந்து பார், ஏதாவது பரிகாரம் சொல்லுகிறேன் என்றும் கூறியிருப்பானே?'' மந்தாகினியின் குரலில் எகத்தாளம் நன்றாகவே தெரிந்தது.

''அக்கா' என்று அதட்டினாள் மாதங்கினி. ''இன்று உனக்கு நான் சொல்வதெல்லாம் அர்த்தமற்ற வெறும் பேச்சாக - வேடிக்கையாகத் தோன்றுகிறது. ஆனால் பொறுத்திருந்து பார்'' என்றாள் சவால் விடுவது போல.

''எவ்வளவு நாள் பொறுத்திருக்க வேணும்? வெறும் பேச்சாம் வேடிக்கையாம். அப்படித் தோன்றினால்தான் நானும் கூடச் சேர்ந்து சிரித்து விட்டுப் போவேனே! எங்கேயோ எட்டாத தூரத்தில் தெரிகிற கானல் நீரைக் கையில் பிடித்து விடுகிற மாதிரிப் பேசுகிறாயே என்று வேதனையாக அல்லவா இருக்கிறது! மாதும்மா, கொஞ்சம் யோசித்துப் பார் சீனுவுக்கு...''

''தமிழ்தாசன் என்று சொல்லு''

''சரி, தமிழ்தாசனுக்குப் புகழும் பணமும் எப்போது வரும் என்று யாருக்குத் தெரியும்? அதுவரை எப்படி வாழப் போகிறீர்கள்? சீனு... இல்லை தமிழ்தாசனை அவன் வீட்டில் இருந்து அவனுடைய பெற்றோரே விரட்டி விட்டார்கள்.''

''அவரது அருமை தெரியாத முட்டாள்கள்!''

''எப்படியோ இருக்கட்டும். அங்கே கால் ஊன்ற வழியில்லை என்பது மட்டும் உறுதி. இங்கே நம் அப்பாவை உனக்குத் தெரியும். சொல்பேச்சைக் கேட்காவிட்டால் அடியோடு வெட்டி விட்டு விடுவார்''



''போகட்டும். யார் உதவியும் எங்களுக்குத் தேவையில்லை''

''ஒருவர் ஆதரவும் இல்லாமல், அவருக்கும் வருமானம் இல்லாமல் எப்படி வாழுவீர்கள்? அதைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தாயா? 'காற்றையுண்டு உயிர் வாழ்வேன்'' என்று பழைய பாட்டுமாதிரி வாழ முடியுமா? அல்லது 'கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா?' என்று அன்று 'பராசக்தி' வசனம் டி.வியில் பார்த்தோமே, அதுபோல இருந்துவிட முடியுமா?' 'பசி வந்திட பத்தும் பறந்துபோம்' என்று பழமொழியே இருக்கிறது. கார், பங்களா, நகை, நட்டு என்று பெரிதாக எதுவும் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. குறைந்த பட்சமாய் வயிற்றுப் பாட்டைத் தீர்க்கும் அளவாவது வருமானம் இருக்க வேண்டாமா? இன்னும்...''

''என்னக்கா நீ, சும்மா சும்மா பணத்தைப் பற்றிப் பேசிக் கொண்டு? அவருக்காகப் பத்து நாள் பட்டினி கிடக்கவும் நான் தயார்தான். என்னைப் பொறுத்த வரையில், தமிழ்தாசன் அருகில் இருந்தால் மண் குடிசையும் மாளிகைதான். பழைய கஞ்சியும் பால் சோறுதான்... அக்கா! கவனித்தாயா?'' என்று மாதங்கினி திடீரென்று பரவசத்துடன் கூவவும் மந்தாகினி சற்றுத் திகைத்துவிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

''இல்லையே...நான் ஒன்றையும் எனக்கு ஒன்றும் கேட்கவில்லையே'' என்று வாயில், ஜன்னல் என்று அவள் ஆராயவும் மாதங்கினிக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

சிரித்துக் கொண்டே, ''வெளியே ஒன்றும் இல்லை. எல்லாமே இங்கேதான். என் பேச்சில்தான். நான் பேசியபோது மோனை நயம் தானாக வந்து விழுந்ததைக் கவனித்தாயா என்று கேட்டேன். மண் குடிசை, மாளிகை, பழைய கஞ்சி - பால் சோறு என்று கேட்கும் போது

காதுக்குள் தேன் பாய்வது போல் எவ்வளவு இனிமையாக இருக்கிறது பார்!'' என்று விளக்கினாள் தங்கை.

''ஆமாமாம். இந்தத் தேனைக் குடிக்க எறும்புகள் சாரிசாரியாகக் காதுக்குள் புகுந்துவிடாமல் பார்த்துக் கொள்!'' என்று எரிச்சலுடன் மொழிந்தாள் தமக்கை.

அக்காவின் கோபத்தை உணரக்கூட இல்லாமல், ''கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்பது இதுதான் போல, மாலையில் தமிழைப் பார்த்ததும் அவரிடம் சொல்ல வேண்டும். அப்படியே பூரித்துப் போவார் என்று நினைக்கிறேன். அக்கா, ஒரு நூறு ரூபாய்க்குச் சில்லறை வேண்டுமே. பூங்காவில் சுண்டல் ஏதாச்சும் வாங்கும்போது முழு நோட்டைக் காட்டினால் விற்க வந்தவர்கள் அத்தனைபேரும் வந்து சூழ்ந்து கொண்டு தொல்லை செய்கிறார்கள்'' என்றாள் தங்கை.

''ஏன், அமராவதிக்கு ஒரு சுண்டல் பொட்டலம் கூட அம்பிகாபதி தன் காசில் வாங்கித் தரமாட்டாரா?'' என்றாள் பெரியவள் ஏளனமாக.

''உன்னிடம் சில்லறை இருந்தால் கொடு. இல்லாவிட்டால் நான் போகிற வழியில் ஏதாவது கடையில் மாற்றிக் கொள்வேன்'' என்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள் மாதங்கினி.

''ஒன்றும் வேண்டாம், திருப்பித் திருப்பி நான் என்ன சொல்லிக் கொண்டு இருக்கிறேன், நீ கொஞ்சமாவது காதில் வாங்கினால்தானே? இன்றைக்குச் சிவனேசன் திரும்பி வருகிறார். நீ எங்கும் போகாமல் வீட்டில் இருக்க வேண்டும்'' என்றாள் மந்தாகினி அதட்டலாக.

அந்தக் குரலுக்கு தங்கை இன்னமும் எகிறினாள். ''எதற்காக? யாரோ ஒரு சிவனேசன் - பெயரைப் பார், சிவனேசன்! சரியான பத்தாம் பசலிப் பழங்காலச் சாமியார் பெயர். அந்த ஆள், எங்கேயோ ஊர் மேயப் போய்விட்டுத் திரும்பி வருகிறார் என்று நான் வீட்டிலேயே காத்துக்கிடக்க வேண்டுமாக்கும். முடியாது. 'முடியாது'' என்று திட்ட வட்டமாக மறுத்தாள்.



மந்தாகினிக்கும் பொறுமையைப் பிடித்து வைத்திருக்க முடியவில்லை. ''ஏன் அவர் பெயருக்கென்ன? நம்மவர்கள் குல தெய்வமே சிவன்தான். சிவனேசன் என்பதில் என்ன கேவலம் இருக்கிறது. அத்தோடு அவர் யாரோ ஒரு சிவனேசன் அல்ல. உனக்குத் திருமணம் செய்வதற்கென்று நம் வீட்டுப் பெரியவர்கள் பார்த்து வைத்திருக்கிற மாப்பிள்ளை. பொறு, நான் சொல்லி முடித்து விடுகிறேன். அத்தோடு அவர் எங்கேயும் ஊர் மேயப் போகவும் இல்லை. தொழிலை விரிவு படுத்துவதற்காக, மத்திய மந்திரியைப் பார்க்கத்தான் டெல்லிக்குப் போயிருக்கிறார்.'' என்றாள் குரலை உயர்த்தி.

தங்கை மட்டும் தளருவாளா, என்ன? ''எனக்குப் பதினெட்டு வயது நிறைந்து மேலும் இரண்டு ஆண்டுகள் முடிந்து விட்டன. இனி என் திருமணம் என் இஷ்டம். யார் யாரோ சொல்லுகிறார்கள் என்பதற்காக, எவனோ ஒரு மக்கு மண்ணாங்கட்டியை மணந்து கொள்ள முடியாது'' என்று தமக்கைக்குச் சரியாகக் கத்தினாள்.

''பிற்பாடு பெண்டாட்டி பிள்ளையை ஓகோ என்று வைத்துக் கொள்ள வேண்டும் என்கிற அக்கறை இருப்பதால்தான் தொழிலுக்காக மந்திரியைப் பார்க்கப் போனார். புரியாமல் உளறாதே!'' என்று பெரியவள் பதிலுக்குக் கத்தினாள்.

இந்த வாக்குவாதச் சத்தத்தினாலோ என்னவோ, மந்தாகினியின் குழந்தை தூக்கம் கலைந்து சிணுங்கியது. குழந்தையை கவனிக்க என்று எழுந்து உள்ளே சென்றாள் பெற்றவள்.

அவளுக்கு கேட்கும்படியாகத் தமக்கை சென்ற பக்கம் திரும்பி நின்று, ''பெரீ...ய்ய தொழில்! இங்கே வாழ்க்கை முழுவதையும் பாதிக்கக்கூடிய ஒரு பிரச்சினை. அதைப் பார்ப்பது முக்கியமா, இல்லை எவனோ ஒரு மந்திரியைப் பார்ப்பது முக்கியமா? 'மந்திரியா வந்து அந்த சிவனேசனின் வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளப் போகிறார்? வாழ்க்கைக்கு எது முக்கியம் என்பது கூடத் தெரியாமல் மந்திரியைப் பார்க்கப் போன மந்த புத்தி மந்தியை நான் ஒரு நாளும் மணக்கப் போவது இல்லை'' என்று உரத்த குரலில் அறிவித்தாள் மாதங்கினி.

குழந்தையின் சிணுங்கல் அழுகையாக மாறியிருக்கவே பிள்ளையைச் சமாதானம் செய்யும் முயற்சியில் இருந்த மந்தாகினிக்குத் தங்கையின் குரல் சரியாகக் காதில் விழுந்ததோ என்னவோ. ஆனால் தன் பேச்சில் மிகுந்த ரசனை உண்டாகிவிட்டது மாதங்கினிக்கு...'மமம' என்று அள்ளிவீசிய மோனை நயத்தையும், 'மந்திரி மந்த, மந்தியில் எதுகை அழகையும் கேட்டு ரசிக்கத் தமிழ்தாசன் இல்லை என்று உள்ளூரச் சிறு வருத்தத்துடன் திரும்பியவள் திகைத்துப் போனாள்.

உயரமாய் ஓர் இளைஞன், செதுக்கினாற்போல மேனியும், உணர்ச்சியற்ற முகமுமாய், வாயிலை அடுத்து நின்று கொண்டிருந்தான்.

சற்று நேரம் திணறிவிட்டு யோசித்து, ''அக்கா, யா...யாரோ வந்திருக்கிறார்கள்.'' என்று உரக்கக் குரல் கொடுத்தாள் மாதங்கினி.

''நான் இங்கே வினுவைக் கவனித்துக் கொண்டு இருக்கிறேன். யார் என்று கேள்'' என்று பதில் குரல் ஒலித்தது.



லேசாகச் செருமிக் கொண்டு, ''நீ...நீங்கள் யார்'' என்று விசாரித்தாள் அவள்.

''ம.பா.போ.மபு.ம'' என்றான் வந்தவன்.

அவளது கண்கள் விரியவும், ''விரிவாக்கம் வேண்டுமா? சொல்கிறேன். மந்திரியைப் பார்க்கப் போன மந்த புத்தி மந்தி'' என்றான் அவன் தெளிவாகவும் கொஞ்சம் குத்தலாகவும்.

## 2

அந்தப் பதிலைக் கேட்டதும், சற்று நேரம் மாதங்கினிக்குப் புலன்கள் செயலிழந்து போயின. கண்ணை இருட்டி, முகமெல்லாம் சூடாகி, வியர்த்து விறு விறுத்துப் போயிற்று.

அவள் பேந்த விழித்துக் கொண்டு நின்றதைப் பார்த்து அவனுக்கு இரக்கம் வந்ததோ என்னவோ, அவளைத் தாண்டிக் கொண்டு உள்ளே வந்து மின் விசிறியின் ஸ்வீட்சைப் போட்டான். ''ரொம்பவும் வியர்க்கிறது இல்லை?'' என்று லேசாக முறுவலித்தான்.

மாதங்கினி இன்னமும் திணறிப் போனாள். வியப்பது அவளுக்கு மட்டும்தான். காரணம் புரிந்து கிண்டல் செய்கிறானா அல்லது சாதாரணமாகத்தான் பேசுகிறானா? அவனது முறுவலும் அவளைத் திகைக்க வைத்தது.

என்ன பேசுவது என்று புரியாவிட்டாலும், இப்படி வாயடைத்து நிற்பது சரியில்லை என்று உணர்ந்து, பேச

வாய் திறந்தவளுக்கு தமிழ் மொழியில் இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்களால் ஆன ஆயிரமாயிரம் வார்த்தைகளில் ஒன்றுகூட நினைவு வராமல் மேலும் தடுமாறினாள்.

சில வினாடிகள் அவளையே பார்த்துக் கொண்டு நின்ற புதியவனின் கண்கள் மென்மையுற, ''பரவாயில்லை. விட்டுவிடுங்கள்'' என்றான்.

''வ...வந்து...'' இவனிடம் என்னவென்று விளக்குவது?

''நான்தான் விட்டு விடச் சொன்னேனே'' என்று மீண்டும் முறுவலித்தான் அவன். கூடவே, ''கமல் வீட்டில் இல்லை போலத் தெரிகிறது. நான் அவனை அவனது அலுவலகத்தில் அவசியப்பட்டால் பார்த்துக் கொள்கிறேன். மந்தாகினியிடம், மந்தாகினி கேட்டால் நான் வந்து போனது சொல்லுங்கள்...'' என்று மீண்டும் அவளைத் தாண்டிக் கொண்டு வெளியே சென்றான். வாயில் ஒரு கணம் நின்று, ''மந்தபுத்தி மந்தி என்று சொல்லிவிட வேண்டாம். என் பெயர் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். நண்பர்களுக்கு நான் 'சிவா' என்று உரைத்தவன் அதற்கு மேல் நில்லாமல் சென்று விட்டான்.

வெள்ளத்தில் முழுகித் தத்தளித்து, ஒருவாறு கரை மீண்டாற் போல இருந்தது மாதங்கினிக்கு.

குழந்தை வினுவின் அழுகுரலோ, அவனைச் சமாதானப்படுத்திக் கொண்டிருந்த சகோதரியின் குரலோ கருத்தை எட்டாது போய்விட, மெல்ல நடந்து சென்று சோபாவில் அமர்ந்தாள்.

'சிவா' என்றால் கேட்க நன்றாய்த்தான் இருக்கிறது என்று தோன்றியது அவளுக்கு. வீட்டுப் பெரியவர்கள், 'சிவனேசன்' என்று பாடாவதி பெயராக வைத்தால், பாசம்,



இவன் என்ன செய்வான்? ஏதோ, தன்னால் இயன்றதாய், அழைக்க, கேட்க இனியதாய்ப் பெயரைச் சுருக்கிக் கொண்டு இருக்கிறான்.

''என்னடி இது' அந்த 'போனிசன்'னை எடு, பிள்ளை அழுகிறான் என்று கத்திக் கொண்டே இருக்கிறேன் இங்கே உட்கார்ந்து கொண்டு என்ன பகல் கனவு காண்கிறாயாம்? அப்படி அந்தத் தமிழ்தாசனிடம் என்ன இருக்கிறது என்றே எனக்குப் புரியவில்லை...!''

''நான் ஒன்றும்...'' என்று மறுக்கத் தொடங்கிய மாதங்கினி, சட்டென்று வாயை மூடிக் கொண்டாள். தமிழ்தாசனை நினைத்துக் கொண்டு இருக்கவில்லை என்று அவள் வாயாலேயே ஒப்புக் கொள்வதா? அதற்கு மேலாக அந்த 'சிவா'வை நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது வேறு இந்த அக்காவுக்கு தெரிந்தால் மகாத் தலையிறக்கம் ஆகிவிடும்.

அத்தோடு, ஏதோ அப்போதுதான் பார்த்த ஒருவரை பற்றி எண்ணிப் பார்ப்பது இயல்பு என்பதை ஒத்துக் கொள்ளாமல் திரும்பவும் உபதேச அறுவையைத் தொடங்கிடுவாள் இந்த அக்கா.

அது மட்டுமல்ல, அந்த 'சிவா' வந்து போனதைக்கூட இவளிடம் சொல்லாமல் விட்டு விடுவதுதான் உத்தமம். ஆனால் அத்தானை அலுவலகத்தில் பார்க்கும்போது அவரிடம் சிவாவே சொல்லி விட்டால்! ஆனால் அத்தானைப் போய் பார்ப்பாரா? சற்றுத் தயங்கி 'தேவைப்பட்டால்' என்றாரே. அவள் பேச்சைக் கேட்ட பிறகு தேவை இல்லை என்று அத்தானைப் பாராமலே சிவா ஒதுங்கிவிடக் கூடும் என்று மாதங்கினி அனுமானித்தாள் அப்படி இருக்கையில் அனாவசியமாக

அவன் பேச்சை எடுத்து அக்காவிடம் வாங்கிக் கட்டிக் கொள்ளுவானேன்?

பேசாதிருந்து விட்டாள்

அதுவும் மாதங்கினி பிள்ளையைத் தோளில் போட்டுத் தட்டிக் கொடுத்தபடி, ''நான் உள்ளே போயிருந்தபோது, விற்பனைக்கு வந்தார்களாக்கும். வரவர இது ஒரு பெரிய தொல்லையாகி விட்டது. இதற்காகவே ஒருநாய் வளர்க்கலாம் போலத் தோன்றுகிறது'' என்று தன் போக்கில் தானாக ஒரு விளக்கம் கொடுக்கவும் நல்லதாயிற்று என்று சும்மா இருந்து விட்டாள்.

ஆனால் உள்ளூர ஓர் உறுத்தல்.

சிறு தயக்கத்தின் பின், 'தேவைப்பட்டால்' என்றானே, உள்ளூர வேதனைப்பட்டிருப்பானோ?''

வினு தொட்டில் போட்ட போது எடுத்த படங்களைப் பார்த்ததும் பிடித்துப் போய்விட்டதாகவும் அதனால் செய்வதைச் செய்யுங்கள் என்று சொன்னதாகவும் அக்கா சொன்னாளே, ஒருவேளை அவள் மேல் ரொம்பவும் ஆசைப்பட்டிருப்பாரோ?

அப்படி ஆசைப்பட்டிருந்தால் இப்போது எவ்வளவு துன்பமாயிருக்கும்?

ஒரேயடியாய் உருகத் தொடங்கிய மனதிற்குப் பிடிவாதமாய்க் கடிவாளமிட்டாள் மாதங்கினி.

அக்கா சொன்னதை முழுவதாக நம்புவதற்கில்லை. அடுத்ததாக அவளுடைய தந்தை ஒன்றும் சின்ன மகளுக்குக் குறைத்துச் செய்துவிடமாட்டார். எப்படியும் வருமானம் வந்தே தீரும் என்ற நம்பிக்கையினாலும் கூட அப்படிச் செய்வதைச் செய்யுங்கள் என்று சிவனேசன் சொல்லியிருக்கலாமில்லையா?



அப்பா வேறு இரண்டு பெண்களும் எனக்குச் சமம். இருவருக்கும் வேறுபாடு காட்டமாட்டேன் என்று அவ்வப்போது சொல்லி வந்திருக்கிறார். அதே கணக்கில், இப்போதே மந்தாகினியுடையது போல அவளுக்கும் பல நகைகளைச் செய்து வைத்திருக்கிறார்.

ஆனால் ஒன்று, அவரது விருப்பத்துக்கு மாறாகத் தமிழ்தாசனை மணந்தால் ஒரு சிறுதோடு கூடத் தரமாட்டார்... போகட்டும் அவளுக்கு நகை ஒன்றும் பெரிதல்ல. அந்த...மரகதப் பச்சையில் செய்த மாங்காய் மாலை மட்டும்...ச்சு அதையெல்லாம் நினைக்கவே கூடாது.

அத்தோடு இப்போது சிந்தித்துக் கொண்டிருந்த விஷயமே வேறு. அந்த சிவா... இல்லையில்லை சிவனேசனைப் பற்றிய விஷயம் அவனுக்கு மாதங்கினியைப் பிடித்துப் போய்விட, இந்தப் பணம் நகையும் கூடக் காரணமாக இருக்கலாமே!

அப்படித்தான் இருக்க வேண்டும்.

மற்றபடி படத்தைப் பார்த்து மையல் கொண்டு மயங்கிவிட அவர் என்ன மதனகாமராஜனா?

அப்படி மயங்கியவராக இருந்தால், அவள் இங்கு வரப்போவது தெரிந்தும் - அவள் வந்து ஒரு வாரம் முழுவதாய் ஏழு நாட்கள் ஆகின்றன. இத்தனை நாள் அவளைப் பார்க்க ஓடோடி வராமல் மந்திரியை சந்திக்க என்று அங்கே டில்லியிலேயே டேரா அடித்திருப்பாரா? மையலாம் மயக்கமாம்' எல்லாம் பொய்! வெறும் டூப்.

அதே சமயம் தமிழ்தாசனைப் பார். இரவு வந்தால் மாதங்கினியைப் பிரிய நேர்கிறது என்று இரவை சபித்து ஒரு பெரிய கவிதையே எழுதிவிட்டாரே!

இதுவல்லவா உண்மைக்காதல்!

அந்தக் கவிதையைச் சிரமப்பட்டு நினைவுக்குக் கொண்டு வந்து ரசிக்க முயன்றாள் மாதங்கினி.

'ஆனந்தபுரி' சற்று வசதியுள்ளவர்களால் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே அமைக்கப்பட்டிருந்த குடியிருப்புப் பகுதி. அது அமைந்து இந்த சுமார் இருபது ஆண்டுகளில் வளம் அதிகமானவர்கள் எடுத்துக் கட்டி வீடுகளைப் பெரிதாக்கிக் கொண்டார்கள். மத்திய நிலைக்காரர்கள் அப்படியே இருந்துவிட, வருமானம் குறைந்து போனவர்கள், முன்தலைமுறை கட்டியிருந்த வீடுகளைப் பகுதி பகுதியாய்ப் பிரித்து வாடகைக்கு விட்டு அதில் கொஞ்சம் பணம் பண்ணினார்கள்.

ஆனால், பல்லாண்டு காலமாகப் பார்த்துப் பழகியவர்கள் என்பதால் மேல்மட்டம் கீழ்மட்டம் என்று பிரிவு இல்லாமல் எல்லோரிடையேயும் ஓரளவு நல்ல உறவே இருந்து வந்தது.

மந்தாகினியுடைய கணவன் கமலநாதன், சிவனேசன் முதலியோருடைய குடும்பங்கள் செல்வம் பெருக்கிய முதல் வகையைச் சேர்ந்தவர்கள். சிவனேசன் குடும்பம் சற்று அதிகமாகவே சிறப்பெய்திய ஒன்று. இப்போதைக்கு, சிவனேசனுடைய தந்தையின் உடல் நலம் கொஞ்சம் கேடுற்றதால், தேற்றிக் கொள்ளவென்று குன்னூரிலிருந்த மகள் வீட்டுக்கு மனைவியோடு சென்றிருந்தார். சிவனேசன் இங்கே தனித்திருந்து தொழிலைக் கவனிக்க நேர்ந்தது.

சிவனேசனும் கமலநாதனும் ஒரே இடத்தில் வசித்து வளர்ந்தவர்கள் என்பதால் டென்னிஸ் கிளப் கல்சுரல் மீட்டிங் என்று ஓரளவு பழகியவர்கள்தான். சமீபத்தில் இரு குடும்பங்களுக்கும் இடையே தொழில் துறையில் இணைப்பு ஏற்படவே இருவருக்கும் இடையே மேலும் நட்பும் நெருக்கமும் உண்டாயிற்று. அதிலும் பெற்றோர் குன்னூர் சென்ற பிறகு வேலை முடிந்த பின் வீட்டில் தனித்திருக்கப் பிடிக்காமல் சிவனேசன் அடிக்கடி, கமலநாதன் வீட்டில் பொழுது போக்குவது வழக்கமாயிற்று.



அப்படி ஒரு சமயத்தில் சிவா தற்செயலாகத்தான் மாதங்கினியின் படங்களைப் பார்க்க நேர்ந்தது.

அவள், மதன காமராஜன் கதையா என்று ஏளனமாக எண்ணியது ஓரளவு மெய்தான். படங்களைப் பார்த்து தொட்டில் போட்டவை. வீடியோ, அதற்கு முன் எடுத்த மந்தாகினி திருமண வீடியோ, போட்டோ எல்லாம் பார்த்து, மந்தாகினியிடம் அவளுடைய தங்கையைப் பற்றிய பேச்சுக் கொடுத்து அறிந்து அறிந்த அளவில் சிவா மயங்கிவிட்டது மெய்தான்.

ஆனால் அந்த ராஜகுமாரனைப் போல, சிவனேசன் மயக்கம் போட்டு விழவும் இல்லை. அவனுக்கு அசகாய சூரத்தனமும் யுக்தியும் செய்து, அந்தப் பெண்ணைக் கொண்டு வர மந்திரி குமாரன் எவனும் வந்து பாடுபடவும் இல்லை.

மாறாக சிவனேசனே, தற்போது நண்பனாகிவிட்ட கமலநாதனிடம் தன் விருப்பத்தைத் தெரிவித்து மேற்கொண்டு ஏற்பாடுகளைச் செய்யும்படி கேட்டுக் கொண்டான்.

கமலநாதன் தம்பதிக்கு இதில் அளவு கடந்த மகிழ்ச்சியே

ஆனால் இதை அப்படியே - மாப்பிள்ளையே ஆசைப்பட்டு பெண் கேட்டான் என்பதை மந்தாகினி அவளுடைய தந்தையிடம் தெரிவிக்க விரும்பவில்லை.

ஏனெனில் காதல் என்ற வார்த்தை காதில் விழுந்தாலே அவளுடைய தந்தை ஆதிமூலம் மகாக் கடுப்பாகி விடுவார்.

அவர் சற்றுப் பழங்கால மனிதர். கிராமத்தை விட்டு நகரத்தில் வாழ்க்கையை அமைத்த முதல் தலைமுறை ஆண் - பெண் கலந்து பேசுவதும் சுற்றுவதும் கொஞ்சமும் பிடிக்காது. அதிலும் சில ஆண்டுகளுக்கு முன்பாக அவருடைய நண்பருடைய மகள், தந்தையின் விருப்பத்துக்கு மாறாகக் காதல் என்று சொல்லி வீட்டை விட்டு வெளியேறி, அவர்கள் வீட்டுக் கார் டிரைவரையே மணந்து கொண்டாள். ஆனால் அந்த வாழ்வை சமாளிக்க முடியாமல், திரும்பி வீடு வரவும் ரோஷம் இடம் தராமல் தவித்து விட்டுக் கடைசியாக தற்கொலை செய்து கொண்டாள். ஆதிமூலத்துடைய நண்பரும், அவருடைய மனைவியும் கூட ஓய்ந்து உருக்குலைந்து விரைவிலேயே மாண்டு போனார்கள்.

அதிலிருந்து, காதல் என்ற வார்த்தையைக் கேட்டாலே அவர் கொதித்து விடுவார். கல்யாணத்துக்கு முன் காதல் பேச்சு எடுக்கிறவன் பக்கா அயோக்கியனாகத்தான் இருப்பான் என்பது அவரது திடமான முடிவு.

அப்படி எண்ணிச் சிவனேசனை அவர் வெறுத்துவிடக்கூடாதே என்று கணவனும் மனைவியும் ஒரு சிறு சூழ்ச்சி செய்தார்கள்.

சிவனேசனது விருப்பம் என்பதை அடியோடு மறைத்து, மாதங்கினிக்குத் தாங்களாக மாப்பிள்ளைப் பார்ப்பது போல, அவருக்கு சிவனேசன் பற்றித் தெரிவித்தார்கள்.

'சிவா' பற்றிய விவரங்கள் அவருக்கு மிகுந்த திருப்தியைத் தரவே, அக்கா வீட்டில் கொஞ்ச நாட்கள் இருந்து வருவதுபோல, மந்தாகினி வீட்டுக்கு அனுப்பி வைப்பதாகவும், அங்கே மாப்பிள்ளை வீட்டார் அவளைப் பார்த்துப் பிடித்து விட்டால் மேற்கொண்டு நடவடிக்கை



எடுக்கலாம் என்றும் கூறி, அதன்படி மாதங்கினியை அனுப்பியும் வைத்தார்.

பழமைவாதியான அந்தப் பெரியவருக்கு, மகளின் திருமணம் பற்றி அவளது விருப்பத்தை அறிய வேண்டும் என்ற எண்ணமே இருக்கவில்லை. இருபது ஆண்டுகள் பார்த்துப் பார்த்து வளர்த்த தகப்பன் அவளுக்குக் கெட்டதைச் செய்யமாட்டான் என்கிற நம்பிக்கை தன் மக்களுக்கு இருக்க வேண்டும்; இருக்கும் என்பது அவரது நம்பிக்கை.

எனவே அவர் எதிலும் மக்களிடம் ஆலோசனை கேட்டது இல்லை. மந்தாகினியின் திருமண விஷயத்திலும் அப்படித்தான்.

மந்தாகினி வீட்டில் எப்போதும் பணிந்து போய் விடுவாள்.

ஆனால் மந்தாகினிக்குக் கொஞ்சம் தந்தையின் முரட்டுத்தனம் உண்டு. தகப்பனாரை எதிர்க்கும் தைரியம் இல்லாவிட்டாலும் தாயார் தமக்கையிடம் லேசில் விடமாட்டாள்.

ஆனால், இம்மென்றால் எகிறுகிறவள் கோபம் குறைந்ததும் கொஞ்சிக் குழைவாள் விழுந்து விழுந்து வேலை செய்து கொடுப்பாள்.

மந்தாகினிக்குத் தங்கையிடம் அலாதி அன்பு. தங்கை, தன்னை விடவும் உயர்வான நிலைக்குச் செல்வது கூடச் சந்தோஷம்.

ஆனால் இந்த மகிழ்ச்சிக்கு ஓர் இடையூறு வந்தது.

வந்த இடையூறு மத்தியத் தொழில் துறை மந்திரியின் உருவிலும் வந்தது.

கவிதைப் பைத்தியத்தால், சீனிவாசன் என்ற தன் பெயரையே, 'தமிழ்தாசன்' என்று மாற்றி அமைத்துக்

கொண்டு அலைந்த ஒரு ஜோல்னாப்பை இளைஞனாலும் வந்தது.

## 3

**மா**தங்கினியின் வரவுக்காக சிவனேசன் ஆவலோடு காத்திருந்த நேரம் அது.

அப்போது பார்த்து அவனது தொழில் தொடர்பான பேச்சு வார்த்தைக்காக, மந்திரியைச் சந்தித்துப் பேசுவதற்காக, மத்திய தொழில் துறை அமைச்சகம் அவனை டெல்லிக்கு அழைத்தது. தொழிலை விரிவு படுத்துவதற்கான அனுமதிக்காகவென்று, சிவனேசனே, ஏற்கனவே வேண்டியிருந்த பேட்டிதான் அது என்பதால், அதைத் தள்ளிப் போடவோ மறுக்கவோ சிவாவுக்கு வழியில்லை. இரண்டும் அவனது முயற்சியையே கெடுத்து விடக்கூடும்.

மேலும் இங்கேயும் இன்று பார்த்து நாளையே திருமணம் என்கிற அவசரம் எதுவும் இல்லையே இரண்டே நாளில் திரும்பி வந்துவிட்டால் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்...

எனவே அமைச்சரைப் பார்த்துப் பேசிவிட்டு, முடிந்த அளவு விரைவில் திரும்பி விடுவதாகச் சொல்லி விட்டு டெல்லிக்குச் சென்றான் சிவா.

அங்கே பல்வேறு அரசியல் காரணங்களினால், அவனது பேட்டியை இதோ இதோ என்று ஒருவாரம் தள்ளிப் போட்டு, காத்திருக்கச் செய்து விட்டார் மந்திரி.



அதற்குள்ளாக, இங்கே தமிழ்தாசன் என்கிற சீனிவாசன், மாதங்கினியின் அழகில் மயங்கி, அவள் பின்னோடு அலைந்து, தன் எதுகை மோனை பேச்சுகளாலும் அடுக்கு மொழியாலும் அவளுக்கு உச்சி குளிரச் செய்து அவளை அவன் புறம் திருப்பிவிட்டான்.

பின்புறம் திரித்திரியாகத் தொங்கும் கலைந்த தலைமுடியும் பித்தான் போடாத ஜிப்பாவும், அழுக்கு ஜோல்னாப் பையுமாக சீனிவாசன் தன் தங்கையின் பின்னே அலைவதை விளையாட்டாய் எண்ணி வேடிக்கை பார்த்த மந்தாகினி, அது வினையாவதை உணர்ந்து தலையிடுமுன், விஷயம் விபரீதம் ஆகிப்போயிற்று.

தந்தையின் கட்டுப்பாட்டால், பெண்கள் இருவரும் வேற்று ஆண்களிடம் நின்று பேசியதே இல்லை எனலாம். அவர்களுடைய சகோதரன் கூட எந்த நண்பனையும் வீடு வரை அழைத்து வந்தது கிடையாது.

அப்படி வளர்ந்த மாதங்கினிக்கு இங்கே தமக்கை வீட்டின் சுற்றுப் புறச் சூழல் வியப்பூட்டியது. ஆண் பெண் வித்தியாசம் இல்லாமல் எல்லோரும் சகஜமாகப் பேசியதே அவளுக்கு மிகுந்த உற்சாகத்தை அளித்தது. கட்டவிழ்ந்த கன்றாய் அவளது உள்ளம் துள்ளி குதித்தது.

அதிலும் ஒருவன் - அவன் சாதாரணப்பட்டவனும் அல்ல; மகாக் கவிஞன். அவன் அவளை வியந்து நோக்கி வெளிப்படையாக உயர்த்திப் பேசவும் ஒரேயடியாக உச்சி குளிர்ந்து போனாள்.

அதற்கும் மேலாக முதல் பார்வையிலே உதித்து விட்டதாக அவன் சொன்ன காதல் வேறு அவளைப் போதை கொள்ளச் செய்தது.

காவியக் காதல்கள் எல்லாமே இப்படித்தானே? கன்னி மாடத்தில் நின்ற சீதையும் தெருவில் நடந்து சென்ற ராமனும்

கூட இப்படிக் 'கண்ணோடு கண்ணிணை' நோக்கி, முதல் பார்வையிலேயே 'செம்புலப் பெயல் நீர் போல' உள்ளம் கலந்தவர்கள்தானே' அதுபோல அவனுக்கு முதல் பார்வையில் காதல் தோன்றிவிட்டது என்றால், அவளுக்கும் அது உதித்துத்தானே ஆக வேண்டும்?

இப்படி முளைத்த காதல் செடி, கண்டபோதெல்லாம் சீனிவாசன் சொன்ன காதல் கவிதைகளால் வேரூன்றி வளரலாயிற்று.

இந்த சீனிவாசனை, மாதங்கினி தமக்கை வீடு வந்த அன்று மாலையில் நடந்த ஒரு சிறு விழாவில், தங்கைக்கு அறிமுகம் செய்து வைத்தவள் மந்தாகினிதான். சீனிவாசனின் நடை, உடை பாவனைகளையும் பேசும் விதத்தையும் பற்றி வீட்டில் சகோதரிகள் இருவரும் கேலி செய்து சிரிக்கலாம் என்ற எண்ணத்தில் செய்தது.

ஆனால் முதல் அறிமுகத்திலிருந்தே கவிதை மன்னன் தன் தங்கை அருகே ஆணி அடித்தாற்போல உட்கார்ந்து விடுவான் என்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அத்தோடு, தங்கை கவிஞனின் பாடல்களை மந்தாகினியின் அபிப்பிராயப்படி உளறல்களைக் காது கொடுத்து கேட்பாள் என்றும் அவள் ஒரு கணம் கூடக் கருதவில்லை.

அன்று இரவில் எதுபற்றியும் தங்கையோடு பேசி மகிழ மந்தாகினியுடைய மகன் விடவில்லை. ஜீரணக் கோளாறோ என்னவோ, ஒரேயடியாக அழுது தீர்த்து விட்டான். பத்தரை மணிக்கு மேல் அவன் உறங்கிய போது, வீட்டில் எல்லோருமே உறங்குகிற நேரமாகிப் போயிற்று.

மறுநாள் காலையில் தொழிற்சாலைக்கு கிளம்ப வேண்டிய கணவனுக்கும், மகனுக்கும் வேண்டியதைப் பார்க்க வேண்டிய வேலைகள் அவளுக்கு இருக்க, தங்கை போரடித்து நிற்பதைப் பார்த்து, ''இப்படியே சற்று தூரம்



உலவி விட்டு வா, இங்கே எந்த பயமும் கிடையாது'' என்று அனுப்பியதும் மந்தாகினிதான்.

அப்போதும், வழியிலேயே அவள் கவிராயனைச் சந்திக்க நேரும் என்றோ, இருவருமாகப் பூங்காவரை சென்று அங்கே உட்கார்ந்து பேசிக் கொண்டு இருப்பார்கள் என்றோ அவளுக்குத் தெரியாதுதான். அப்படிச் சென்றதைத் தங்கையே தெரிவித்த போதும் அதைப் பெரிதாக அவள் நினைக்கவில்லை. ஏதோ இந்தப் பகுதிக்கு புதியவளான பெண்ணுக்கு அவன் இடம் காட்டச் சென்றிருப்பான் என்றே நினைத்தாள். அந்த அளவுக்கு சீனி யோசித்து உதவியிருக்கிறானே என்று சிறு ஆச்சரியம் மட்டுமே.

கவலைப்பட ஒன்றும் இல்லாவிட்டாலும், லேசாக உடம்பு சுட, அழுகையும் அனத்தலுமாக வினு அடுத்த மூன்று தினங்கள் தாயின் நேரம் முழுமையையும் தனதாக்கிக் கொண்டான்.

மாதங்கினிக்கு குழந்தைகள் அழுதால் தாங்க முடியாது. அதிலும் வினு அவள் அறியப் பிறந்த, அந்த வீட்டின் முதல் அடுத்த தலைமுறை உடல் கோளாறு காரணமாக அழுகையில் தாயை ஒட்டிக் கொண்டு நகர மறுக்க, செய்வது அறியாமல் கலங்கிய முகத்துடன் தங்கை நிற்பதைப் பார்த்து, பிள்ளைக்குப் பல் முளைக்க வந்த சுரம் விரைவில் விட்டுவிடும் என்று அவளைத் தேற்றி, காலை மாலையில் பார்க், லைப்ரரி என்று சுற்றி வரும்படி வெளியே அனுப்பி வைத்தாள் மந்தாகினி.

இந்த சமயங்களில் அவளது வரவுக்காகவே காத்திருந்தாற் போல் சீனி அவளோடு சேர்ந்து நடப்பதும், இருவருமாகப் பூங்காவில் அமர்ந்து பேசுவதும் வழக்கம் ஆயிற்று.

அப்படிப் பேசும்போது ஒரு சமயம் பாரதியாரின் 'சுட்டும் விழிச் சுடர்தான் கண்ணம்மா'வைச் சற்று மாற்றி, "மின்னும் சூரியனும் சந்திரனுமே உன் கன்னத்துக்கு மேல் கண்களாயின" என்று கூறி மாதங்கனியின் இமைகளைப் படபடக்க வைத்தான் தமிழ்தாசன். 'கரும்பஞ்சுக்குவியலோ உன் கார் வண்ணக் கூந்தல்!" என்றான். 'எள்ளுப்பூ நாசி என் உள்ளமதைக் கொள்ளை கொண்டதே' என்று இயம்பினான். கொவ்வைப் பழ உதடுகள் தன் உயிரைக் கவ்விக் கொண்டு போனதாக இசைத்தான். 'பயிருக்கு மழை போல என் உயிருக்குள் கரைந்தபோது தூங்கொணாது சோகம்' என்று சுருக்கமாக விருத்தம் பாடினான்.

மாதங்கனி கிறங்கிப் போனாள்.

ஒருவாறு மகனுக்கு நல்ல குணமாகி, வாழ்க்கை இயல்புக்கு வந்த பிறகுதான் மந்தாகினிக்குத் தங்கையோடு உட்கார்ந்து பேச நேரம் கிடைத்தது.

அப்படிப் பேசியபோது, ஆவலும் ஆர்வமுமாகத் தங்கை சொன்ன விஷயத்தை முதலில் அவளால் நம்ப முடியவில்லை.

ஆதிமூலம் வீட்டில் இருக்கும் நேரங்களில் பெரும்பாலும் 'கப்சிப்'பென்று இருந்தாலும், அவர் வீட்டில் இல்லாத வேளைகளில் பிள்ளைகள் மூவரும் ஏதாவது கேலி கிண்டல் என்று ரகளை செய்து மகிழ்வதும் உண்டுதான்.

அப்படித்தான் தங்கை ஏதாவது வேடிக்கை செய்கிறாளோ என்று தான் முதலில் மந்தாகினி எண்ணினாள். ஏனெனில் இருந்திருந்து சீனியைப் போய் சுய புத்தியுள்ள எவளாலும் காதலிக்க முடியுமா, அதுவும் வகுப்பில் முதல் மார்க் வாங்கும் தன் கெட்டிக்காரத் தங்கையால் எப்படி இயலும் என்று அவளுக்கு ஒரே சந்தேகம்.



ஆனால், முதல் மார்க்குக்கும் புத்திசாலித்தனத்துக்கும் சம்பந்தமே கிடையாது என்று தங்கை உறுதிப்படுத்தவும் மந்தாகினி கதி கலங்கிப் போனாள்.

இப்போது டெல்லியிலிருந்து ஆவலோடு சிவா வருவானே, அவனிடம் என்ன சொல்வது? பெற்ற தந்தையிடம் என்ன சொல்வது? எல்லோருமாக முதலில் அவளை - மந்தாகினியைக் கூறு போட்டுவிடமாட்டார்களா?

சிவாவின் கோபம் தொழிலில் பிரதிபலித்தால் மந்தாகினியின் மாமனார், ஏன் கணவன் கூட அவளிடம் அதிருப்தி அடையக் கூடும்.

இவை எல்லாவற்றையும் விட முக்கியமாய், வெறும் கனவுலகில் 'வாழ்ந்து,'ஆனாக்க அந்த மடம், ஆகாட்டி சந்தமடம்' என்று கிடைத்தால் உண்டு இல்லாவிட்டால் பட்டினியும் கிடக்கும் சீனிவாசனை மணந்தால் தங்கையின் வாழ்வு என்ன ஆகும்?

கிழிந்த உடையும் மெலிந்த உடலுமாகத் தங்கையின் ஒரு தோற்றம் மனதில் தோன்றி அவளை உடல் சிலிர்க்கச் செய்தது.

கடவுளே! இதை எப்படியும் தடுத்தாக வேண்டும். அதுவும், சிவா, அப்பா இருவரும் அறியும் முன்பே மாதங்கினிக்குப் புத்தி புகட்டியாக வேண்டும் என்று மந்தாகினி முடிவு செய்தாள்.

ஆனால் காதல் பித்தம் தலைக்கேறி விட்டிருந்த மாதங்கினி, தமக்கை தொண்டை உலரப் பேசிய பேச்சில் ஒருவார்த்தையைக் கூடக் காதில் வாங்கிக் கொண்டா

ளில்லை, தமக்கை என்ன சொன்னாலும் வெட்டியே பேசினாள்.

அன்று தொடங்கி, அக்கா தங்கை இருவருக்கும் ஒரே போராட்டம்தான்.

முதலில் மந்தாகினி அமைதியாகத்தான் சொன்னாள் தமிழ்தாசன் என்று தன்னைச் சொல்லிக் கொள்ளும் சீனிவாசனைப் பற்றி அவள் அறிந்தவற்றை - மாதங்கினி தவிர அந்தச் சுற்று வட்டாரம் முழுவதும் அறிந்திருந்த உண்மைகளை எடுத்துச் சொன்னாள்.

''வெங்கடாசலபதி அவர்களுடைய குல தெய்வம். அதற்காக ஆசையாய் சீனிவாசன் என்று பெற்றோர் பெயர் வைத்தால் அதைப் போய் மடத்தனமாக மாற்றிக் கொண்டு இருக்கிறான் பார்! பாவம் அவனுடைய பெற்றோருக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கும்?''

''இதில் கஷ்டப்பட என்ன இருக்கிறது?'' என்றாள் மாதங்கினி. ''தமிழ் அவரது தாய் மொழி. தாய்க்கு நிகரான மொழி. அந்தத் தமிழின் தாசன் என்று பெயரை மாற்றியதிலிருந்தே அவருக்கு எவ்வளவு தாய் மொழிப் பற்று இருக்கிறது என்று புரிந்து மரியாதை கொடுக்க வேண்டும். அதைவிட்டு வருத்தப்படுகிற முட்டாள்கள் பட வேண்டியதுதான்'' என்றாள் அலட்சியமாக.

முட்டாளா? அவளையும் சேர்த்தல்லவா முட்டாள் என்கிறாள்! ஆத்திரப்பட்டு விடாமல், ''இன்னும் நிறைய விஷயம் நீ தெரிந்து கொள்ள வேண்டியது இருக்கிறது மாது. இந்த சீனுவை...'' என்று மீண்டும் தொடங்கியவளை இடையிட்டு, ''தமிழ்தாசன் என்று சொல்லு'' என்று அதட்டினாள் மாதங்கினி.



ஒரு பெருமூச்சுடன், ''சரி, தமிழ்தாசன் என்றே வைத்துக் கொள்ளலாம். அவனை அவன் வீட்டிலிருந்து அவனுடைய பெற்றோரே விரட்டி விட்டார்கள், தெரியுமா? அது...''

''அவருடைய அருமை தெரியாத அறிவிலிகள்! பிள்ளையின் அருமை பெருமை எதுவும் பெற்றவர்களுக்கு தெரியாதிருப்பது எவ்வளவு கொடுமை! பாவம் தமிழ்தாசன்'' என்று உருகினாள் மாதங்கினி.

பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு ''தமிழ்தாசனுடைய தந்தை பெரிய கடை வைத்திருந்தார். மாதும்மா. மகனிடம் விட்டுப் போகிறபோதெல்லாம், கவனியாமல் விட்டும், கண்டவர்களுக்கு அள்ளிக் கொடுத்தும் ரொம்பவும் நஷ்டப்படுத்தி விட்டான். வீட்டில் ஒரு தரம் இப்படித்தான். மகன் இருக்கிறான் என்று வீட்டைப் பூட்டாமல் அவன் தாயார் வெளியே சென்ற போது இவன் பாட்டில் பாட்டுக்கு 'சீன்' பார்க்க என்று போய்விட, திருடன் வந்து மகளின் திருமணத்துக்குச் செய்து வைத்திருந்த நகை எல்லாம் எடுத்துப் போய் விட்டான். அந்தப் பெண்ணின் திருமணமே நின்று போய் விட்டது. அது மட்டுமல்ல... சரி வேண்டாம். இப்படிப் பலதடவை பார்த்துவிட்டு மனம் வெறுத்து மகனை வீட்டை விட்டு விரட்டினார் அவன் தந்தை'' என்று விளக்கமாக விவரம் கொடுத்தாள் பெரியவள்.

ஆனால், ''சுத்த ஞான சூனியங்கள்!'' என்று வெடித்தாள் தங்கை. ஒரு கவிஞனுக்கு உரிய மரியாதை கொடுக்காமல், கல்லாவில் உட்கார வைத்தால் அப்படித்தான் நடக்கும். தமிழின் தாயாரோ அதற்கும் மேல், ஓர் உன்னதக் கலைஞனை வீட்டுக்குக் காவல்காரனாக

வைத்தார்களாக்கும். தராதரம் தெரியாமல் நடந்துக் கொண்டால் நஷ்டப்பட்டுத்தான் தீர வேண்டும். கடவுள் கொடுத்த தண்டனை. பட வேண்டியதுதான்.'' என்று தீர்ப்புக் கூறினாள்.

''ஆமாம்! பெரிய்ய கவிஞன்! நீதான் மெச்சிக் கொள்ள வேண்டும். இன்றைக்கு வரையில், அவனது கவிதை என்று ஒரு வரி பத்திரிகையில் வந்து யாரும் பார்த்தது இல்லை.'' என்றாள் மந்தாகினி ஏளனமாக.

தமக்கையைக் கோபமாக முறைத்துவிட்டு, ''பத்திரிகையில் பிரசுரம் ஆவது என்ன, கவிஞர் என்பதற்கு உரிய ஐ.எஸ்.ஐ. முத்திரையா? முதலில், இந்தப் பத்திரிகைகளின் வண்டவாளம் தெரியாதா? பெயர் வந்து விட்டால் அவர்கள் வீட்டு லாண்டரிக் கணக்கைக் கூட பிரசுரம் செய்வார்கள். எவ்வளவு திறமைசாலியாக இருந்தாலும் புதிதாக வருபவருக்குக் கை கொடுக்கவே மாட்டார்கள்! இவற்றை வைத்து ஒருவரை எடை போடுவதாக்கும்?'' என்றாள் தங்கை.

''அப்படி ஒரேயடியாகச் சொல்லிவிட முடியுமா?. அத்தோடு, இன்றைக்குப் பிரபலம் ஆனவர்களும் ஒரு காலத்தில் புதியவர்களாகத்தானே இருந்திருப்பார்கள். அவர்களது திறமையை இனம். கண்டு ஏதாவது பத்திரிகைக்காரர்கள் அதைப் பிரசுரித்திருந்தால் தானே அவர்களும் புகழ் பெற்றிருக்க வேண்டும்?'' என்று வாதாடினாள் மந்தாகினி.

திறமையை இனம் காண்பதாவது இன்னொன்றாவது? எல்லாம் யாரையாவது காக்காய் பிடித்து சிபாரிசில் வந்திருப்பார்கள்'' என்றாள் மாதங்கினி இளக்காரமாக.



''அதெல்லாம்...'' என்று மறுத்துப் பேசத் தொடங்கிய மந்தாகினி பேச்சு திசை மாறிப் போவதை உணர்ந்து, ''எது எப்படியோ போகட்டும் மாது. யார் எப்படிப் புகழ் பெற்றால் நமக்கு என்ன வந்தது. ஆனால், எப்படியாவது பிரசுரம் ஆனால்தானே இந்தத் தமிழ்தாசனாலும் நாலு காசு சம்பாதிக்க முடியும்?'' என்று விஷயத்துக்கு வந்தாள்.

''காசு! காசு! ஏன்தான் இப்படி பணத்தாசை பிடித்து அலைகிறாயோ?'' என்று சின்னவள் முகத்தில் அடித்தாற் போலப் பேசவும் மந்தாகினிக்குத் தொண்டை அடைத்தது.

அவளுக்கா பணத்தாசை?

இங்கே அவள் வீட்டில் குடும்பத்தொழில். எவ்வளவு தான் கணவன் ஆசையாக இருந்தாலும் . அவளது விருப்பம் போல கணக்கின்றி செலவு செய்ய பணம் எடுத்துக் கொடுக்க அவனால் முடியாது. எனவே தகப்பனார் பொங்கலுக்கென்று கொடுத்த பணத்தில் தனக்காக ஒரு காசு செலவு செய்யாமல், தங்கைக்குப் பரிசாக 'மன்மந்திர்' சேலை ஒன்று ஆயிரம் ரூபாய்க்கு வாங்கி வைத்திருக்கிறாள். அவளைப் போய் பணத்தாசை பிடித்து அலைவதாக நாக்கில் நரம்பில்லாமல் கூறி விட்டாளே! அத்தோடு, அவள் இத்தனை பாடுபடுவதும் சுய லாபம் கருதியா? எல்லாம் இந்த மூடத் தங்கைக்காகத் தானே?

இழுத்துப் பிடித்து வைத்திருந்த் பொறுமை பறந்துவிட, ''ஆமாமடியம்மா. நாங்கள் எல்லாம் பணத்தாசை பிடித்த பேய்கள்தான். காசாசை பிடித்த காட்டேறிகள்தான். நீங்கள் மட்டும் பைசா இல்லாமல் குடித்தனம் செய்து விடுவீர்களா? காலையில் எழுந்தால் பல் துலக்க பேஸ்ட்டும் பிரஷ்ஷும் காசு கொடுத்து வாங்கிக் கிடைப்பதுதான். அப்புறம் காலைக்

காபி இல்லாமல் ஒருநாள் இருந்துவிடுவாயா? காபித்தூள், பால் விலை தெரியுமா உனக்கு? காலைப் பலகாரம், மதிய உணவு, மாலைக் காபி டிபன், இரவு சாப்பாடு, பால், அத்தனையும் வக்கணையாக வேண்டுமே உனக்கு. இதெல்லாம் பணம் இல்லாமல் ஒரு 'சூமந்திரக்காளி'யில் சும்மா வருவது என்று நினைத்தாயா? இதற்கெல்லாம் என்ன செய்வதாக உத்தேசமாம்?'' என்று படபடவென்று பொரிந்து கொட்டினாள் மந்தாகினி.

''எங்கேயாவது வேலைக்குப் போய் நானே வேண்டியதை சம்பாதிப்பேன்.'' என்று தலையைச் சிலுப்பினாள் மாதங்கினி.

''யார் உனக்கு வேலை தருவார்களாம்? பெரிய பெரிய பட்டம் வாங்கியவர்களே வேலையில்லாமல் தவிக்கிறார்கள். 'ரிசல்ட்' கூட வராத ஃபைன் ஆர்ட்ஸ் பிஏ' உனக்கு எப்படி வேலை கிடைக்கும்?''

சற்றுத் தடுமாறிவிட்டு, ''நாலு வீட்டில் பத்துப் பாத்திரம் தேய்த்து என்னோடு அவரையும் சேர்த்துக் காப்பாற்றிக் கொள்வேன்'' என்றாள் மாதங்கினி வீராப்புடன்.

''யார்? நீ! ஆலிவ் ஆயில் தடவி அழகு நிலையத்தில் சீர்படுத்துகிற இந்த நகங்கள் உடைய பத்துப் பாத்திரம் தேய்ப்பாயாக்கும்! பத்துப் பாத்திரம் என்றால் எண்ணிப் பத்தே பாத்திரம் என்று நினைத்தாயா? பற்றுப் பிடித்த அழுக்குப் பாத்திரம்! பத்துப் பத்தாய் ஒரு வீட்டுக்கு நூறு பாத்திரம் விழும். அதை போய் நீ...'' என்று எகத்தாளம் செய்த தமக்கை உடனேயே இறங்கி, ''அதெல்லாம் உன்னால் முடிகிற காரியமில்லை. மாது நம் விட்டு ஆயாவைப் பார், ஒரு வாய்க் காபியோடு வேலை செய்கிறாள். மிச்சம் மீதி என்று நாம் கொடுப்பதை எடுத்துப்



போய் அதையும் பிள்ளைகளுக்குக் கொடுத்து விட்டு மீதி இருந்தால் சாப்பிடுகிறாள். இல்லாவிட்டால் பானைத் தண்ணீர்தானாம். இந்த மாதிரிப் பட்டினி எல்லாம் உனக்குத் தாங்குமா, கண்ணம்மா?'' என்று கனிவுடன் வினவினாள்.

அக்காவின் 'கண்ணம்மா'வில் சற்று இளகிய மாதங்கினி, உடனே நிமிர்ந்து ''இந்தப் பசி பட்டினி மிரட்டல் எல்லாம் என்னிடம் வேண்டாம். இதற்கு நான் முன்பே பதில் சொல்லியிருக்கிறேன்.'' என்று தலையைச் சிலுப்பினாள்.

சின்னவளின் பழைய சோறு, பாலன்னம், வசனம் நினைவு வர மந்தாகினி சோர்ந்து போனாள்.

நல்லதற்குச் சொன்னால் முழுசாக இரண்டு வயது சின்னவள், கேட்க வேண்டாமா என்ற கோபம் ஒருபுறம். கூடவே, பசி பட்டினி என்றால் என்னவென்றே அறியாமல் பைத்தியக்காரத்தனமாய் உளறுகிறாளே என்ற பரிதாபம் ஒருபுறம். அத்தோடு, அந்த நிலைக்குத் தங்கை ஆளாகிவிடாமல் காப்பாற்றியே தீரவேண்டும் என்ற பிடிவாதமும் இருக்கவே, விடாமல் தங்கைக்கு உபதேசம் செய்தாள் மந்தாகினி.

'எறும்பு ஊறக் கல்லும் தேயும்' என்பது பழமொழி. ஆனால் இந்தக் கல் எகிறிக் குதித்தது.

சகோதரிகள் இருவருக்கும் இடையே நடந்த இந்த இடைவிடாத போராட்டம், கமலநாதனின் கவனத்தை எட்டிவிட, மனைவியை அழைத்து விவரம் கேட்டான் அவன்.

இந்த புத்திகெட்ட பெண்ணின் பிடிவாதத்தால் அவளது குடும்ப வாழ்வு எந்த அளவுக்குப் பாதிக்கப்படக் கூடும்?

கண்ணில் கலக்கத்துடன் கணவனை நோக்கினாள் மந்தாகினி.

# 4

'இப்படி ஒரு தங்கையா உனக்கு?'

'இவ்வளவு முற்றும்வரை நீ எங்கே தூங்கிக் கொண்டிருந்தாய்?'

'இதனால் குடும்பம் எவ்வளவு கஷ்டப்படப் போகிறது தெரியுமா?

இப்படியெல்லாம் கணவன் கடிந்து பேசக்கூடும் என்ற எதிர்பார்ப்பிலேயே மந்தாகினிக்குக் கண் கலங்கிவிட்டது.

ஆனால், அவள் இன்னமும் தன் கணவனை முழுமையாக அறிந்து கொள்ள வில்லை என்பதை அவளுக்கு உணர்த்துவதுபோல, அவளது கலக்கம் தாளாமல் மனைவியை அணைத்துக்கொண்டான் கமலநாதன்.

''என்னடா, என்ன விஷயம்? எவ்வளவு பெரிய கஷ்டம் என்றாலும் என்னிடம் சொல்லு. நான் பார்த்துக் கொள்ளுகிறேன். அதை விட்டு விட்டு அனாவசியமாய்க் கண்ணீர் விடலாமா? நீ கண்ணீர் விட்டால் என்னால் தாங்க முடியுமடா, கண்ணா?'' என்று பாகாய் உருகிப் போனான்.



கணவன் கொடுத்த தைரியத்தில், தொழில் பற்றிய அச்சம் உள்ளே இருந்த போதும், உள்ளது உள்ளபடி கணவனிடம் ஒப்புவித்துவிட்டாள் அவள்.

சற்று நேர யோசனையின் பின் மனைவியை முகம் கழுவி வரச் செய்து தோளில் சாய்த்துக் கொண்டு அதன் பிறகே கமலநாதன் பேசத் தொடங்கினான். ''மதிம்மா, நான் சொல்வதைக் கவனமாகக் கேட்க வேண்டும். உன் தங்கைக்கும் சிவாவுக்கும் திருமணம் நடந்தால் நம் இரு குடும்பங்களுக்கும் இடையே உள்ள தொழில் உறவு நன்கு பலப்படும் என்பது உண்மைதான். கூடவே உன் தங்கை நன்றாக இருப்பாள் என்பதும் மெய்தான். அதனால் இந்தத் திருமணம் நடப்பதும் முக்கியம்தான். ஆனால் இவை எல்லாவற்றையும் விட எனக்கு முக்கியமானது எது தெரியுமா?'' என்று கேட்டு அவளை நோக்கினான்.

அவனது கண்களில் கனிவு, அந்தக் கேள்விக்குரிய பதிலையும் விளக்கி விட, மந்தாகினியின் இதழ்களில் சிறு புன்னகை மலர்ந்தது.

குனிந்து, மனைவியின் நெற்றியில் முத்தமிட்டுவிட்டு, அவன் மேலே தொடர்ந்தான். ''ஆமாம் உன் மகிழ்ச்சி. இந்த உலகில் மற்ற எதையும் விட எனக்கு அதுதான் முக்கியம்.

''சில நாட்களாக நீ எப்படி சோர்ந்து போய் இருக்கிறாய், தெரியுமா? சரியாகச் சாப்பிட்ட மாதிரித் தெரிய வில்லை. எந்நேரமும் கண்களில் கவலை. என்னைக் கூட நீ வழக்கம் போலக் கவனிக்க வில்லை. அவ்வளவு பாடு நீ பட்டாக வேண்டுமா? ம்?''

''அவளுக்கு சொன்னால் புரிய மாட்டேன் என்கிறதே!'' என்றாள் மனைவி கண்கள் கசிய.

''விட்டுவிடு'' என்றான் கணவன்.

மந்தாகினி திகைத்து நோக்கவும் ''பாரம்மா, நம்மால் ஆனதைச் செய்கிறோம் சொல்கிறோம். கேட்டு நல்லபடியாக வாழ்வதோ, மறுத்து நோவதோ அவள் பாடு. அதற்காக நீ இப்படி அலட்டிக் கொள்வதா?'' என்று அவளது இதழ்களில் மென்மையாக முத்தமிட்டான்.

கணவனின் கனிவு இதமாயிருந்த போதும், ''பிறகு அவள் கஷ்டப்படுவாளே!'' என்று அதிலேயே உழன்றாள் மந்தாகினி.

''அதற்கு நாம் என்ன செய்வது? பார், சண்டிக் குதிரை என்றாலும் பிடித்து இழுத்துப் போய்த் தண்ணீர் அருகில் விடுகிற வரைதான், நம்மால் இயலுகிற காரியம். தண்ணீரைக் குடிக்க வைக்க நம்மால் ஆகுமா? அது குதிரையாகப் பார்த்துச் செய்ய வேண்டியது. முடியாது, தண்ணீர் குடிக்காமல் தொண்டை காய்ந்து கஷ்டப் பட்டுத்தான் தீருவேன் என்றால் அங்கே மற்றவர்கள் செய்வதற்கு எதுவும் இல்லை.''

''அப்படியானால்?''

''சீனிவாசனின் குறைகளை உன் தங்கைக்கு எடுத்துச் சொல்லு. சிவாவின் நிறைகளையும் கூறு. சிவா வந்ததும் அறிமுகம் செய்து வைப்போம். அத்தோடு நம் கடமை முடிந்தது. கையிலிருக்கும் மாலையை அவள் யாருக்குப் போடுகிறாளோ, அது மாதங்கினியின் வசதி. பிறக்கும் போதே அவள் தலையில் அந்தப் பிரமன் எழுதி வைத்தது. அதற்காக அனாவசியமாக நீ தவிப்பது எனக்குச் சம்மதம்



இல்லை. அத்தோடு இதனாலெல்லாம் எங்கள் நட்போ, தொழில் உறவோ உடைந்து விடக் கூடும் என்று நீ அஞ்சத் தேவையில்லை. உன் தங்கையின் மடத்தனத்துக்கு நம்மிடம் குற்றம் காணும் அளவு சிவா முட்டாளில்லை. அதனால் இதற்காக நீ இப்படி வருந்தத் தேவையில்லை.'' என்றான் மந்தாகினியுடைய அன்புக் கணவன்.

கணவனின் பாசமும் பரிவும் எவ்வளவோ இதமாக இருந்த போதும், தங்கையின் தலைவிதிப்படி நடக்கட்டும் என்று விட்டுவிட மந்தாகினியின் ரத்த பாசம் இடம் தரவில்லை. கெஞ்சியும் மிஞ்சியும் தங்கையின் மனதை மாற்ற முன் போலவே தன்னால் ஆன மட்டும் முயன்று கொண்டேதான் இருந்தாள். ஆனால் ஒரு சிறு வேறுபாடு. செய்வதை ஒரு திடத்துடனும் தெம்புடனும் செய்தாள். அவளுடைய அருமைக் கணவனின் அன்பு கொடுத்த திடம் அது.

இந்த நிலையில்தான், டில்லியில் வேலை வெற்றிகரமாக முடிந்து, சிவனேசன் திரும்பி வருவதாகத் தகவல் வந்தது.

மந்தாகினி, முன்னிலும் அதிகம் முயல, மாதங்கினி அதே அளவில் எதிர்க்க, சிவனேசன் அதைத் தன் காதாலேயே கேட்டுத் திரும்பிச் சென்றான்.

ஆனால் அவன் வந்து போன சேதி அறியாமல், மந்தாகினி தன் கடமையைத் தொடர்ந்து செய்தாள்.

அன்று மாலையில், காலனியில் ஒரு வீட்டில், குழந்தைக்குப் பெயர் சூட்டு விழா ஒன்று இருந்தது.

அங்குள்ள வழக்கம்போலக் குடியிருப்பில் எல்லோரையும் அழைத்திருந்தார்கள். சிவனேசனுடைய

பெற்றோர் ஊரில் இல்லாததால் அவர்கள் வீட்டுப் பிரதிநிதியாக சிவா கட்டாயம் அந்த விழாவுக்குச் செல்ல வேண்டியிருக்கும். அங்கே அவனை நேரில் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தால், தங்கையின் மனம் நிச்சயமாக மாறிவிடும் என்று நம்பி, அவளை கூட அழைத்துச் சென்றாள் மந்தாகினி.

அவள் எதிர்பார்த்தது போலவே சிவனேசனும் விழாவுக்கு வந்திருந்தான். புதியவர்கள் நடுவே மாதங்கினி சற்றுத் தயங்கி ஒதுங்கி நிற்க, முன் சென்ற மந்தாகினி, சிவனேசனைக் கண்டதும் முறுவலித்து, ''என்ன இப்போதுதான் வந்தீர்களா? மாலை விமானத்தில்தான் இடம் கிடைத்ததா?'' என்று பேச்சுப் போக்கில் வினவினாள்.

''இல்லையே. காலையிலேயே வந்துவிட்டேனே...'' என்று அவனது பதிலைக் கேட்டதும் மாதங்கினி உதட்டைக் கடித்துக் கொண்டாள். இனி, இவன் வந்து சென்றதைச் சொல்லாததற்கு வேறு அக்கா அவளை வறுத்து எடுக்கப் போகிறாள்....

''என்னது? காலையில் வந்தவர் இதுவரை வீட்டுப் பக்கம் வராமல்... என்ன சார், வருந்தி அழைக்க வேண்டிய விருந்தாளி ஆகிவிட்டீர்களா? இருங்கள், அவரிடம் சொல்லுகிறேன்...'' என்று கேலிக் குரலில் மிரட்டினாள் மந்தாகினி.

சட்டென அவன் பார்வை விலகி, மாதங்கினியை நாட, அவள் விழிகளால் இறைஞ்சக் கண்டான்.

பார்வையைத் திருப்பி, ''அப்படி ஒன்றும் இல்லை, சிஸ்டர், அங்கே, டெல்லியில், மந்திரி எந்த நேரம்



அழைப்பாரோ என்று தயார் நிலையிலேயே காத்துக் கிடந்தது ஒரே அலுப்பாக இருந்ததா? அப்படியே பகல் முழுவதும் ப்டுத்திருந்து விட்டேன்.'' என்றான் அவன்.

கண்கள் நிறைய நன்றியை நிரப்பிக் கொண்டு அவன் பார்வைக்காகக் காத்திருக்கையில் அவன் மேலும் பேசினான். ''அங்கே அதுதான் டெல்லியில் நம்மை படாதபாடு படுத்திவிடுகிறார்கள். அசல் குரங்காட்டம்தான். அங்கேபட்ட பாட்டில், யாராவது 'மந்தி' என்று அழைத்தால் என்ன என்று கேட்டுவிடுவேன் போல இருக்கிறது'' என்று கூறி மீண்டும் மாதங்கினியைப் பதற வைத்தான் சிவனேசன்.

''அதெப்படி 'மந்தி' என்று அழைப்பார்களாம். 'மந்தி' பெண்பால் தெரியுமா?'' என்று ஆட்சேபித்தாள் மந்தாகினி.

''என்னவோ ஒன்று இதெல்லாம் உங்களைப் போல் எல்லோருக்கும் தெரிந்திருக்குமா, சிஸ்டர்? அறியாதவர்களும் உண்டு'' என்று மீண்டும் பார்வையை வீசினான் சிவா என்கிற சிவனேசன்.

மாதங்கினிக்கு, அன்றைய சீதாபிராட்டியாரைப் போலப் பூமிக்குள் புதைந்து போய்விட மாட்டோமா என்றிருந்தது.

காப்பாற்றினான் என்றால் காலையும் வாருகிறானே!

இப்போது இவனுக்குத் தன்னை அறிமுகம் செய்விக்கப் போகிறாள், அக்கா. அப்போதும் இப்படி, பதில் சொல்ல முடியாதபடி என்னென்ன மாதிரி மட்டம் தட்டுவானோ?

நாலைந்து பேர் மொத்தமாக வரவே, அவர்களின் பின்னே மறைந்தபடி அங்கிருந்து விலகிப் போனாள் அவள்.

''ஓ! என் இனிய மாதங்கினி, நீ இங்கேயா இருக்கிறாய்? அதனால்தான் இந்த வீட்டில், இந்தப் பகுதி மட்டும் தனி ஒளியோடு பிரகாசிக்கிறது! சூரியனும் சந்திரனும் உன் கண்கள் ஆன பிறகு, நீயிருக்கும் இடத்தில் மட்டும் தானே ஒளி இருக்க முடியும்...'' என்றபடி அவள் அருகே தமிழ்தாசன் வந்து சேர்ந்தான்.

மாதங்கினி இருமனமாய் நிற்க, ''ஒன்று அறிவாயா, மாதங்கினி, இனிமேல் நான் என் பெயரை மாதங்கினிதாசன் என்று மாற்றிவிடப் போகிறேன். தமிழ் என் உயிர் என்றால் நீ என் உயிரைவிட மேலானவள் அல்லவா? என் உயிரினும், என் உயிர்த் தமிழினும் உன்னை நான் அதிகம் நேசிப்பதால், அந்தப் பெயர்தான் இனி எனக்குத் தகுந்த பெயர் அல்லவா?'' என்று சீனிவாசன் கூறவும் அவள் அப்படியே உருகிப் போனாள்.

உயிருக்கும் மேலாக நேசிக்கும் ஒருவனுக்கு மேலாக உலகத்தில் என்ன இருக்க முடியும்?

அதன்பிறகு, ''உனக்கு ஒரு கவிதை சொல்ல வேண்டும். இந்தக் கூட்டத்தில், உட்கார இடமில்லாமல் நிற்பதைவிட பூங்காவில், வண்ண மலர் செடிகளுக்கு இடையே தோகை மயிலாய் நீ அமர்ந்து அதைக் கேட்டால் பொருத்தமாக இருக்கும்'' என்று அவன் அழைத்தபோது, அவனுடன் செல்வது அவளுக்குத் தவறாகப்படவில்லை.

பூங்காவில் அமர்ந்து, அவன் 'சொன்ன கவிதை அவளை இன்னமும் உச்சி குளிர வைத்தது.

இவ்வளவு நேசமுள்ள ஒரு காதலன் கிடைத்திருப்பது, அவள் எத்தனையோ பிறவிகளில் செய்த புண்ணியம்தான்!



இப்படி எல்லாம் மாதங்கினி மகிழ்ந்து கொண்டிருந்தது மிகவும் கொஞ்ச நேரமே. அதற்குள் பூஜை வேளைக் கரடியாக அவளுடைய தமக்கை அங்கே வந்து நின்றாள். வந்த வேகத்தில், ''உனக்கு கொஞ்சமேனும் அறிவு இருக்கிறதா? இந்த நேரத்தில் இங்கே வந்து உட்கார்ந்து கொண்டு இருக்கிறாயே! எல்லோரும் என்ன நினைப்பார்கள்?'' என்று சீறி விழுந்தாள்.

காதலன் முன்னிலையில் 'அறிவிருக்கிறதா' என்று அக்கா கேட்டுவிட்டாளே என்ற ஆத்திரமும், அதே சமயத்தில் விருந்துக்குச் சென்ற இடத்தில் இடையில் கிளம்பி வந்தது தான் செய்த தவறு என்கிற குற்ற உணர்வும் சேர்ந்து மாதங்கினியை வாயடைக்கச் செய்தன.

ஆனால், அது போன்ற உணர்வுகள் ஏதுமற்ற சீனிவாசன், மந்தாகினியின் வார்த்தைகளில் ஒன்றான 'நேரத்தை' மட்டும் பிடித்து, ''ஏன்? இந்த நேரத்துக்கு என்ன? ஒரு வேளை... அங்கே சாப்பாடு, தொடங்கிவிட்டார்களா? நான் சாப்பிட வேண்டுமே, நான் சாப்பிடப் போகிறேன், மாதங்கினி'' என்று எழுந்து விருந்து வீடு நோக்கி நடந்தான்.

'சாப்பிட வேண்டுமே' என்று சீனிவாசன் சொன்னது மந்தாகினியின் தாய் மனதைத் தொட்டுவிட, தோள் பையின் கனம் தாங்காதவனைப் போல ஒருபுறமாய்ச் சாய்ந்து நடப்பதைப் பார்த்தபடி சற்று நேரம் பேசாமல் நின்றாள் அவள்.

உடனேயே அந்த இரக்க உணர்வை விலக்கிவிட விரும்பியவள் போலத் தோளைக் குலுக்கிக் கொண்டு தங்கையின் புறம் திரும்பினாள்.

அவளுக்கு மாதங்கினியிடம் மிகுந்த கோபம், சிவாவுக்குத் தங்கையை அறிமுகம் செய்விக்க எண்ணித் திரும்பிப் பார்த்தால், அதுவரையும் பின்னோடு வந்தவளை கண்ணிலேயே காணவில்லை. பெண்ணைக் கண்ணில் கூட காட்டவில்லை என்றால் சிவா என்ன நினைப்பான்?

அவனிடம் ஏதோ சமாளித்துவிட்டு, விலகிச் சென்று, ரகசியமாய் விசாரித்து, இங்கே வந்து சேர்ந்தாள்.

தங்கையை நன்றாகத் திட்ட வேண்டும் என்று வாயைத்திறந்தவளுக்கு வேறு தோன்றியது. ''பார் மாது, சாப்பாடு என்றதும் கூட நீ இருப்பதையே மறந்துவிட்டு ஓடுகிறான்'' என்றாள் கேலிக் குரலில்.

''மறக்க ஒன்றும் இல்லை. எனக்குத்தான் நீ துணை இருக்கிறாயே என்று எண்ணியிருப்பார். அவரது அன்பு பற்றி உனக்கு என்ன தெரியும்? ஒன்று தெரியுமா? அவர் தன் பெயரை 'மந்தாகினி தாசன்' என்று மாற்றிக் கொள்ளப் போகிறாராம். உயிரான தமிழைவிட என்னை அதிகம் நேசிப்பதால்தானே.''

''ஒருதரம் பெயரை மாற்றியவன் அதை மீண்டும் செய்வதில் பிரமாதமாய் என்ன இருக்கிறது?''

''பெயர் மாற்றம் மட்டுமா? என் பேரில் ஒரு கவிதை எழுதி இருக்கிறார், கேள்''

அங்கிங்கெனாதபடி எங்கும் இருக்கும்மா

தங்கினி. உன் அழகுத் திருமுகத்தை

எங்கணும் எப்போதும் காண முடியாது போயின்

தங்குமா என் ஆவி.''



என்கிறார். பார்த்தாயா எவ்வளவு கருத்தாழம் உள்ள பாடல்!'

''என்ன கருத்தோ, எனக்குப் புரியவில்லை. 'அங்கிங்கெனாதபடி எங்கும் இருப்பவளை' 'எங்கணும் காண்பதில் என்ன கஷ்டம்' அது முடியாமல் போனால் 'ஆவி தங்குமா' என்று அது என்ன கேள்வி?'' தமக்கையின் ஏளனக் குரல் உசுப்பிவிட, அதெல்லாம் புரிய மண்டைக்குள் கொஞ்சம் ஞானமும் இருக்க வேண்டும்'' என்றாள் மாதங்கினி இகழ்ச்சியாக.

இப்போது ஆத்திரப்படுவது அக்காவின் முறையாயிற்று. ''ஆமாண்டி, எங்கள் மண்டைக்குள் களிமண் தவிர வேறு ஒன்றுமே கிடையாது. விட்டு விடுவோம். நீதான் எனக்கும் சேர்த்து வைத்திருக்கிறாயே, எடுத்து விளக்குவது தானே?'' என்றாள் வெடுக்கென.

''அது- அது- வந்து, எதுகை, மோனை, சந்தம் என்றெல்லாம் பாட்டில் உண்டு. அதற்காகச் சிலது சிலதை மாற்றலாம்.'' என்று ஒருவாறு விளக்கி முடித்தாள் மாதங்கினி.

''நானும் ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன், தமிழ்ப் பாடத்தில் யாப்பிலக்கணம் படித்து பத்து, மார்க் கேள் விக்குப் பதில் எழுதியவள்தான். நீ சொன்னவைகளுக்காகக் குறிலை நெடிலாக்கலாம், நெடிலைக் குறிலாக்கலாமே தவிர, பாட்டின் பொருளிலேயே முரண்பாடு வர முடியாது...'' என்ற மூத்தவள் சட்டெனத் தங்கையின் அருகே அமர்ந்தாள், சிவாவைச் சந்திக்க நேருமுன், இன்னும் ஒருமுறை இந்தப் பெண்ணுக்குப் புத்தி புகட்டிப் பார்த்தால் என்ன?

குரலைத் தணித்து அவசரத்துடன் பேசினாள், ''மாதும்மா, கவிதையின் மூலமான கருப்பொருளையே குழப்புகிறவனைப் போய் பெரிய கவிஞன் என்று எண்ணி மயங்குகிறாயே' மாதுக்குட்டி, நீ சின்னப் பெண். வெகுளி, இவ்வளவு நாள் படிப்பு படிப்பு என்று இருந்து விட்டாய். இப்போதுதானே வெளி உலகம் பார்க்கிறாய்? இங்கே, இந்த பாண்ட், ஷர்ட் அணிந்த மற்றவர்கள் நடுவில் ஜிப்பாவும், ஜோல்னா பையுமாக மற்றவர்களிலிருந்து மாறுபட்ட ஒருவனைப் பார்த்ததும் - அவன் வேறு உன் பின்னோடு சுற்றுகிறானா அவன் மேல் ஒரு கவர்ச்சி உண்டாகி...''

''கவர்ச்சி இல்லை. இது உண்மைக் காதல்'' என்று இடையிட்டுச் சொன்னாள் மாதங்கினி.

''கொஞ்சம் நான் பேசி முடிக்கும் வரை குறுக்கிடாமல் கேட்கக் கூடாதா?'' என்று கடிந்தாள் தமக்கை.

சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லித் தொலை என்பது போல உதடுகளை அழுந்த மூடிக் கொண்டு அமர்ந்திருந்த தங்கையைக் கவலையுடன் நோக்கினாள். என்ன சொல்லி இவளுக்கு உணர்த்துவது?

''மாது, அவனை - சீனுவை நம்பிக் குடும்பம் நடத்த முடியாதும்மா. ஒரு வாழ்க்கைத் துணையாக அவனை நம்ப முடியாதும்மா'' என்றாள் ஒரு தவிப்புடன்.

''ஏன் அவர் பொய் சொன்னாரா?''

''இல்லை. ஆனால்...''

''திருடினாரா...''

''அப்படி இல்லை''

''கொலை கிலை செய்துவிட்டாரா?''



''மாது... நான் என்ன...''

''ரேஸ், சூதாட்டம் என்று பழக்கம் உண்டா? போதை மருந்து எடுக்கிறாரா? பெண்ணாசை?''

''ஐயோ, அதெல்லாம் இல்லையடி. ஆனால்...''

''கெட்டது என்று அகராதியிலோ, வாழ்க்கை முறையிலோ உண்டான எதையும் செய்யாத ஒருவரை நம்பமுடியாது என்று சொல்ல உனக்கு வெட்கமாயில்லை?''

''கடவுளே! நான் 'நம்ப முடியாது' என்றது வேறு விஷயமடி. ஒருநாள் அவன் அக்கா குழந்தை இரண்டு வயதுப் பிள்ளையை இவனிடம் விட்டு விட்டுப் போனால், பிள்ளை தண்ணீர்த் தொட்டியில் விழுந்து சாக இருந்தது. இவன் கவிதை யோசித்தானாம். கடைசியாக வீட்டுக்கு வந்த வேறு ஒருவர்தான் நீர்க் குமிழி மாதிரி சத்தம் கேட்டு, ஓடிப் போய்ப் பார்த்து எடுத்துக் காப்பாற்றினாராம். பிள்ளை உயிர் பிழைத்தது மறு பிறவிதான். அதில்தான் குடும்ப முழுமையும் அவனை வெறுத்து வீட்டை விட்டு விரட்டி விட்டார்கள். சீனுவுடைய அக்கா கணவர் கேஸ் போட்டு சீனுவை ஜெயிலில் போட வேண்டும் என்று கலாட்டா செய்தார் என்று கூடக் கேள்வி...''

ஆத்திரத்துடன் எழுந்து நின்றாள் மாதங்கினி. ''பொய் இதை நான் நம்பமாட்டேன். நாளைக்கு உன் பிள்ளைக்கும் இதுதான் கதி என்று மிரட்டப் பார்க்கிறாய்...''

''இல்லையடி எல்லாம் உண்மைதான்.''

''உண்மை என்றால் இதை நீ முன்பே சொல்லியிருக்கலாமே''

சொல்லத்தான் நினைத்தேன். ஆனால் குழந்தை சாக இருந்தது என்றால் நீ ரொம்பவும் கலங்கிப் போவாயே

என்று தான்... மற்றதிலேயே நீ திருந்திவிடுவாய் என்று நினைத்துதான்...''

''இல்லை குழந்தை என்றால் என்னைக் கலக்கிவிடலாம் என்று புரிந்து இப்போதுதான் இந்தக் கதையை இட்டுக் கட்டியிருக்கிறாய். என்ன, அவரிடம் பணம் இல்லை. உன் தங்கை கணவர் பெரிய தொழில் அதிபர் என்று உன்னால் பெருமை பேச முடியாது அதுதானே. ஓ! மறந்துவிட்டேனே. பொருளாதார ரீதியிலும் உனக்கு இது நட்டமாகிவிடுமே! ஆனால், அதற்காக நீ இப்படிக் கீழிறங்குவாய் என்று நான் நினைத்ததே இல்லை அக்கா. உன் பெருமைக்காக, வசதிக்காக, என் மனதை முறித்துவிடப் பார்க்கிறாயே! சீச்சீ!''

'சீச்சியா? மந்தாகினியும் கொதித்துவிட்டாள். ''ஏய், என்னடி ரொம்ப ரொம்ப ஒட்டுகிறாயே! மரியாதையாக நான் சொல்வதைக் கேட்டுக் கொண்டு நடப்பதானால் இங்கே இரு. இல்லாவிட்டால், ஊருக்குத் திரும்பிப் போய்விடு. அங்கே அப்பாவிடம் சொல்லி என்ன வேண்டுமானாலும் பண்ணிக் கொள். இங்கே இருந்து என்னைக் கேவலப்படுத்தாதே'' என்று சீறினாள்.

''ஓகோ! மிரட்டலா? அப்பாவிடம் அனுப்பி என்னை என் தமிழிடம் இருந்து பிரிக்கப் பார்க்கிறாயா? அதுதான் நடக்காது. எனக்குப் பதினெட்டு வயது முடிந்து, மேலும் இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. என் விருப்பம் போல, நான் நாளைக்கே தமிழைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டாலும் அதை யாராலும் தடுக்க முடியாது தெரியுமா?''

''ஏ... ஏய்... என்னடி? என்ன உளறுகிறாய்?'' என்று பதறினாள் மூத்தவள்.

''உளறல் இல்லை, உண்மை. இதற்குமேல் நீ என் விருப்பத்துக்கு மாறாக என்ன நடவடிக்கை எடுத்தாலும்



நான் செய்யப் போவது இதுதான். இதில் யாருடைய விருப்பு வெறுப்புகளையும் நான் மதிக்கப் போவது இல்லை. அப்பா, அண்ணன், நீ எல்லோரும் ஒத்து வந்தால் வீட்டு வழக்கம் போல் கல்யாணம் நடக்கும். இல்லையென்றால் பதிவுத் திருமணம் எப்படியும் ஒருநாள் தமிழ்தாசனை மணப்பது உறுதி! உறுதி! உறுதி! என்று அழுத்தம் திருத்தமாக அறிவித்தாள் மாதங்கினி.

அந்த அறிவிப்பின் வேகமோ என்னவோ, ஒரு சிறு பொழுது அங்கே நிசப்தம் நிலவியது.

ஒருவரை ஒருவர் பார்த்தபடி பெரிய மூச்சுகளை எடுத்துக் கொண்டிருந்த சகோதரிகள் இருவரும் ''க்குகும்'' என்று ஒரு சிறு செறுமல் சத்தத்தில் திரும்பிப் பார்த்துத் திகைத்தனர்.

அசையாத பார்வை மாதங்கினியின் முகத்தில் நிலைத்திருக்க அங்கே நின்றவன், சிவனேசன்!

இரு பெண்களும், அதிர்ச்சியிலிருந்து மீளுமுன், ஒரு எட்டு முன்னே எடுத்து வைத்து, ''உங்கள் வருங்கால இல்லற நல்வாழ்வுக்கு, என் வாழ்த்துக்கள்'' என்று கவனத்துடன் உணர்ச்சி துடைத்த குரலில் உரைத்தான் அவன்.

## 5

**வா**ழ்த்தியவனுக்கு நன்றி கூறுவது முறை என்று அறிந்திருந்த போதும், முடியாமல் மாதங்கினி தலை

குனிந்து நிற்க, ''ஓ... ஒன்றுமில்லை, சிவா, சின்னப் பெண். புரியாமல் உளறுகிறாள். நான்... நான் அப்பாவிடம்...'' என்று பரபரத்த மந்தாகினியை நோக்கித் தலையசைத்தான் சிவனேசன்.

''உங்கள் தங்கையை மணக்க நான் விரும்பியது உண்மைதான் மந்தாகினி. ஆனால் அதற்காக அவள் மனதை முறித்து, கட்டாய மணம் புரிவது எனக்குச் சம்மதமில்லை. மாதங்கினியின் விருப்பம்போல் எல்லாம் நடக்கட்டும். இனித் திரும்பிப் போகலாமா? விழாவுக்கு என்று வந்துவிட்டு, இப்படி வெளியே சுற்றுவது நாகரிகம் இல்லை வாருங்கள்'' என்று இருவரையும் அழைத்துக் கொண்டு சென்றான்.

வீட்டினுள் புகும்போதே எதிர் கொண்ட வீட்டுக்காரரிடம், ''மந்தாகினியுடைய தங்கை, நம் ஊருக்குப் புதிது அல்லவா? நம் பூங்காவைச் சுற்றிக் காட்டிவிட்டு வந்தேன்.'' என்று பழியைத் தன் பேரில் ஏற்றுக் கொண்டு, இரு பெண்களின் நன்றிக்கும் பாத்திரமானான்.

விருந்தில் என்ன உண்டாள், என்ன அருந்தினாள் என்று மாதங்கினிக்கு எதுவும் நினைவு கிடையாது. சூழ இருந்தோரின் சிரிப்பிலும் பேச்சிலும் கலந்து கொள்ள முடியாமல் தொண்டை அடைத்தது. சிவா எல்லோருடனும் கலகலப்பாகப் பழகுவதையும், மற்றவர்கள் அவனோடு விரும்பிப் பேசுவதையும் காணக் காண நெஞ்சுக்கூட்டினுள் ஒருபாரம் ஏறுவதைக் காரணம் புரிபடாத வேதனையுடன் அவள் உணர்ந்தாள்.

அதிலும் தமிழ்தாசன் ஓர் ஓரமாய் விட்டத்தை வெறித்தபடி, அமர்ந்திருப்பதையும், அவனை யாரும் ஒரு பொருட்டாய்க் கருதாமல் - அவன் அங்கு இருப்பது



கண்ணில் படாததுபோல் மற்றவர்கள் நடந்து கொள்வதையும் கூடக் காண நேரவும் அதற்கு மேல் அவளுக்கு அங்கே இருக்கவே முடியவில்லை. பணக்காரன் என்பதால் சிவாவைச் சுற்றுகிறார்கள் என்று எண்ணிய போதும், தமிழ்தாசன் அருகில் சென்று அமர அவளுக்கும் பிடிக்கவில்லை.

''தலையை வலிக்கிறது. நான் முதலில் வீட்டுக்குப் போகிறேன்'' என்று தமக்கையிடம் முணுமுணுத்துவிட்டு, அங்கிருந்து கிளம்பிவிட்டாள்.

வீடு நடந்து செல்லக்கூடிய தூரம்தான். அத்தோடு, மந்தாகினிக்கு வேறு நினைப்பும் இருக்கவே, தடுத்து நிறுத்தாமல், தங்கையை அனுப்பி வைத்தாள்.

வீட்டுக்கார அம்மாளிடம் விடைபெற்றுக் கொண்டு மாதங்கினி கிளம்புவதைக் கவனியாது, முன்போலவே தமிழ்தாசன் அமர்ந்திருக்க, அவனிடம் ஒரு பார்வையைச் செலுத்திவிட்டு, மடமடவென்று வெளியேறினாள் அவள்.

ஆனால் சுற்றுமதில் கேட்டைத் தாண்டும்போது, ''இவர்களை வீட்டில் விட்டு விட்டு வருகிறேன்.'' என்று கூட வந்தவனிடம் சொல்லிவிட்டு சிவா கூட வந்து சேரவும் திகைத்து நின்றாள்.

''ப... பரவாயில்லை. வீடு பக்கம்தானே? நானே போ...ய்க் கொள்வே...ன்'' என்று தயக்கத்துடன் தடுமாறினாள்.

மேலே நடக்குமாறு சைகை செய்துவிட்டு, உடன் நடந்தபடி, ''ப்ளீஸ், ஒரு மிக அழகிய பெண்ணுக்குத் துணை வரும் - குறைந்த பட்சம் வீடு வரை துணை வரும் பாக்கியத்தைத் தயவு செய்து நீங்கள் எனக்கு மறுக்கக் கூடாது'' என்று வெண்பற்கள் பளிச்சிட அவன் முறுவலித்தபோது மீண்டும் அவளுக்குத் தொண்டை அடைத்தது.

பேசமாட்டாமல் நடந்தவள், வீடு நெருங்கவும், சமாளித்துக் கொண்டு அவன் புறம் திரும்பி, ''மிஸ்டர் சிவனேசன்...'' என்று தொடங்கினாள்.

அவள் மேலே பேசுமுன், ''ஊகூம் நண்பர்களுக்கு நான் 'சிவா' என்றேனே. குறைந்த பட்சமாக உங்கள் நட்பையேனும் எனக்குத் தரலாமில்லையா? அல்லது... அதற்குக்கூட நான் அருகதை அற்றவனா?'' என்று தன் ஆழ்ந்த குரலில் சிறு கரகரப்புடன் சிவா வினவவும் அவளுக்கு கண்ணோரம் கரித்தது.

தன்னை சமனப்படுத்திக் கொள்ள மாதங்கினிக்குச் சில வினாடிகள் தேவைப்பட்டன. அதன்பின், ''பாருங்கள், சிவா, நான்... நான் உங்களை மணப்பதற்கு இல்லை என்றால் அது... அதன் பொருள் உங்களிடம் ஏதும் குறையிருக்கிறது என்பதல்ல. உ.உங்களிடம் எந்தவிதக் குறையுமே கிடையாது. நீங்கள் மிகவும் உயர்ந்தவர் என்று எனக்கு... எனக்கு நன்றாகவே தெரிகிறது. ஆனால்... ஆனால்...'' என்று முடிக்க மாட்டாமல் திணறினாள்.

''எனக்குப் புரிகிறது, மாதங்கினி. நீங்கள்... நீங்கள் முதலிலேயே சீனுவாசனை விரும்பி... அதாவது காதலித்து விட்டீர்கள்; என்ன செய்வது? சமயம் பார்த்து மந்திரி என்னை டெல்லியில் பிடித்துப் போட்டுவிட்டார். அப்பா இங்கே இருந்திருந்தால் மந்திரியைச் சந்திக்கச் செல்லும்படி அவரிடம் கேட்டிருப்பேன். எப்படியோ, இனி அதை எண்ணிப் பயன் இல்லை. போகட்டும் நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். உங்கள் அன்பனாக இருக்க முடியாவிட்டாலும் நண்பனாக என்னை ஏற்றுக் கொண்டீர்கள் என்றால் அதுவே போதும்.''

மாதங்கினி சிரமப்பட்டு முறுவலிக்க, பதிலுக்குப் புன்னகை செய்து, ''நீங்கள் உள்ளே செல்லுங்கள். இந்தப் பகுதியில் பயம் ஏதும் கிடையாது என்றாலும், நீங்கள் பாதுகாப்பாய் வீட்டினுள் செல்வதைப் பார்த்து விட்டால் எனக்கு நிம்மதியாய் இருக்கும்.'' சிவா கூறவும், அதன்படி வீட்டினுள் சென்று, கையசைத்து விடை கொடுத்து விட்டுக் கதவைச் சாத்தினாள் அவள்.



சாத்திய கதவுக்குப் பின்னே, சற்று நேரம் அசையாமல் நின்றவளுக்குப் பெருமூச்சு வந்தது. பெண்ணைப் போற்றுவது என்பது இதுதான் போலும். இவனை மணக்கப் போகிறவள் பெரும் பாக்கியசாலி!

மீண்டும் விருந்து வீட்டை சிவா அடைந்தபோது அங்கே கமலநாதன் தம்பதியர் அவனுக்காக காத்திருந்தனர். விழா வீட்டில் பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு மற்றவர்களோடு இன்முகம் காட்டிப் பேசிக் கொண்டிருந்துவிட்டு, ஒருவாறு எல்லோரும் கிளம்பத் தொடங்கியதும், ''என்னோடு வாருங்கள். காரில் ஒரு சுற்று சுற்றி விட்டு வரலாம்'' என்று அழைத்துச் சென்றான்.

கார் கிளம்பியதுமே, ''சிவா, மாதங்கினி சின்னப் பெண். அறியாதவள். பார்க்கில் அவள் பேசியதைப் பெரிசாகக் கணக்கில் எடுக்கக்கூடாது'' என்று அவசரமாக உரைத்தாள் மந்தாகினி.

கமலநாதனும், ''என்னப்பா, ஏதோ இல்லற நல்வாழ்வுக்கு வாழ்த்தினாயாமே?'' என்றான் குற்றம் சாட்டும் குரலில்.

காலனியை விட்டுச் சற்று தூரம் சென்றபின் காரை ஓரமாக ஒதுக்கி நிறுத்தினான் சிவா. அவர்களை நோக்கி திரும்பிக் கேட்டான். ''இல்லற நல்வாழ்வுக்கு வாழ்த்தினேனே தவிர, அது யாரோடான வாழ்வு என்று சொன்னேனா?''

இருவரும் திகைத்து நோக்கவும், ஒரு பெருமூச்சுடன், ''நாலைந்து நாட்களாக உங்கள் தங்கையோடு பயங்கர

வாக்கு வாதம் செய்திருப்பீர்கள் போல?'' என்றான் மந்தாகினியிடம்.

''நாலு நாட்களாக'' என்றான் கமலநாதன். ''உண்ண வில்லை, உறங்கவில்லை. நான்கூடப் புறக் கணிக்கப்பட்டு விட்டேன் என்றால் பாரேன்.''

''இனி அதை நிறுத்தி விடுங்கள். உன் விருப்பம் ஏன்று அவளிடம் கூறிவிடுங்கள்'' என்று குண்டு போட்டான் சிவா.

மற்ற இருவருமே அதிர்ந்து போயினர்.

விரைவிலேயே சமாளித்துக் கொண்டு ''சிவா, என் தங்கை உலகம் தெரியாத பச்சைக் குழந்தை. நாலு பேரிடம் பழகி அறியாதவள். இங்கே இந்தச் சீனு கண்ணுமணி காதுமணி என்று கவிதை பாடவும் கிறங்கிப் போனாள். ஒரு தரத்துக்கு நாலு தடவையாக எடுத்துச் சொன்னால் புரிந்து கொண்டு விடப் போகிறாள்...'' என்று மந்தாகினி படபடக்கையில், ''அப்படிச் சொன்னதன் பலன்தான் என் பெயரைச் சொன்னாலே அவளுக்கு கசக்கும்படி ஆகியிருக்கிறது. சீனுவாசனை மணக்கப் போவதாக பொது இடத்தில் அறிவிக்க வைத்திருக்கிறது'' என்றான் சிவா.

''எ... என்னது?'' என்று மந்தாகினி புரியாமல் கேட்டாள்.

''சிஸ்டர், உங்கள் தங்கையைப் பற்றி, உங்கள் பேச்சிலிருந்து நான் அறிந்திருக்கும் அளவு, அவளைப் பற்றி உங்களுக்குத் தெரியவில்லையே. செலுத்திய வழி செல்வதற்கு, மாதங்கினி, வெறும் செம்மறி ஆட்டுக் குட்டியல்ல சிஸ்டர். அவள் சீறும் புலிக்குட்டி. சீண்டச் சீண்டச் சீறல் அதிகமாகுமே தவிர, ஒருநாளும் அதட்டல் மிரட்டல்களுக்கு அடிபணியமாட்டாள்.''

''ஆமா...ம் அப்பாவைக் கண்டால் எங்கள் வீட்டில் எல்லோருக்கும் சிம்ம சொப்பனம். மாதங்கினி மட்டும்தான்



அவரிடம் திருப்பிப் பேசுகிறவள்... ஆனால் இவள் மடத்தனமாய்ச் சீனுவிடம் இளிக்கும்போது நான் எப்படிச் சும்மா இருப்பது?''

''நீங்கள் சும்மா இருந்திருந்தால், நாலே நாளில் சீனியின் அர்த்தமற்ற வதைகளும் பொறுப்பற்ற போக்கும் அவளுக்குப் புளித்துப் போயிருக்கும். அதைவிட்டு, நீங்கள் அதட்டி மிரட்டி அடக்க முயன்றதால்தான் அவள் அப்படி மீறிக் கொண்டு நிற்கிறாள். இப்போது அவள் அறிவிப்பை நான் வேறு கேட்கும்படி ஆகிவிட்டது.''

''ஆனாலும் நீ வாழ்த்தியது ரொம்பவும் அதிகப்படிதான் சிவா'' என்றான் கமலநாதன்.

''அதனால்தான் என்னை ஒரு நண்பனாக வேணும் ஏற்றுக் கொண்டாள். வேறு என்ன செய்திருந்தாலும் என்னையும் விரோதியாகக் கருதி வெறுத்திருப்பாள்'' என்றான் சிவா.

சிறு மவுனத்தின் பின், ''இப்போது என்ன செய்வது... எப்படி நடந்து கொண்டால் இந்தச் சிக்கல் நல்லபடியாகத் தீரும்?'' என்று மந்தாகினி கவலையுடன் கேட்டாள்.

''மாதங்கினிக்கு எந்த விதத்திலும் தடை விதிக்காதீர்கள். சொல்லப்போனால் ஓட்டல், சினிமா, பீச் என்று நீங்களே சீனுவோடு அவளை வெளியே அனுப்புங்கள்... மாலை, இரவு... எந்த நேரம் என்றாலும் பரவாயில்லை.

''உன் ஐடியா அவ்வளவு சரியாக எனக்குப் படவில்லை சிவா. பற்றிக் கொள்ளத் துடிக்கும் பஞ்சையும் நெருப்பையும் பக்கத்திலேயே வைக்கச் சொல்கிறாய். நாளைக்கு ஒன்று கிடக்க ஒன்று ஆனால், இவள் அப்பாவுக்கு நாங்களல்லவா பதில் சொல்லியாக வேண்டும்?'' என்று கமலநாதன் ஆட்சேபிக்க, அதை

ஒப்பித் தலையாட்டினாள் அவன் பத்தினி. ''அத்தோடு சீனிவாசனை நம்பி எப்படி அவளை அனுப்புவது?'' என்பது அவளது அச்சம்.

''உங்கள் தங்கையின் ஒழுக்கத்தில் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது, மந்தாகினி. சீனியும் அந்த மாதிரித் தப்புத் தண்டாவுக்குத் துடிக்கிறவன் அல்ல. என்னை நம்பி, நான் சொல்லுவதைப் போலச் செய்யுங்கள். அவளுக்கு எந்தவித ஆபத்தும் வராமல் காப்பாற்றுவது என் பொறுப்பு. இருவரும் என்னை நம்புகிறீர்கள்தானே? பத்துநாள், ஒரு பத்தே நாட்கள் போதும். இந்த சீனிவாசன் என்ன பெரிய ஆள்? இவனைப் போட்டியில் என்னால் வெல்ல முடியாதா என்ன?'' என்று தன்னம்பிக்கையோடு உரைத்தான் சிவா.

''பத்து நாட்கள்தான். ஏனென்றால் அப்பா வேறு இவளை அழைத்துப் போகவும் மேற்கொண்டு பேச்சு நடத்தவும் என்று பத்துப் பதினைந்து நாட்களில் வருவதாக எழுதியிருக்கிறார். அவர் வருகிற நேரம் ஏதாவது கசாமுசா என்றால் எனக்கும் நன்றாக மண்டகப்படி நடக்கும்'' என்றாள் மந்தாகினி கவலையும் பயமுமாக.

''கவலையே படாதீர்கள்'' என்றவன் ஒரு தயக்கத்தின் பின். ''ஆனால் ஒரு வேளை மாதங்கினி உறுதியோடு இருந்து விட்டால், மந்தாகினி, நீங்கள் அதற்கு மேல் அவள் விருப்பப்படி விட்டுவிட வேண்டியதுதான்'' என்று முடித்தான்.

''என்ன சிவா, அதற்குள் பின்னடிக்கிறாய்?'' என்றான் கமலநாதன். கேலிக் குரலில்.

''அப்படியில்லை கமல். அவளுக்கு இருப்பது வெறும் கவர்ச்சி என்று மதிப்பிட்டு நாம் ஏதேதோ திட்டம் போடுகிறோம். ஆனால் அவள் கொண்டிருப்பது உண்மையான நேசமே என்று ஆகிவிட்டால், அதற்கு நாம் மதிப்புக் கொடுத்துத்தானே ஆக வேண்டும். ஒருவன் பெண்டாட்டியை அடுத்தவன் கொள்ள முடியாது என்று என் பாட்டி ஒரு வாசகம் சொல்வார்கள். இந்தச் சீனுவுக்கும் ஒருத்தி பிறந்துதானே இருப்பாள். விசித்திரமான வகையில் அது மாதங்கினியாக இருந்துவிட்டால்?''



''ஒரு வெறும் பயலுக்குப் பெண்ணைக் கொடுக்க என் அப்பா ஒரு நாளும் சம்மதிக்கமாட்டார். அவரை மீறி அவள் ஏதேனும் செய்தால் ஒரேயடியாய் வெறுத்து விடுவார்.'' என்றாள் மந்தாகினி.

அவரைத் தப்பு சொல்வதும் முடியாததுதான். இப்படி நடக்கவும் கூடுமோ என்று ஓர் அனுமானம் செய்யவே எனக்கு வேதனையாக இருக்கும்போது, இப்படித்தான் என்று ஆகிவிட்டால் பெற்றவருக்கு எப்படி இருக்கும்? ஆனால் ஒன்று, சிஸ்டர் பொருளின்மை மட்டும் துன்பம் ஆகிவிடாது. மனம் ஒவ்வாத வாழ்வு அதைவிடப் பெரும் வேதனை. இதில் மாதங்கினி எந்தக் கஷ்டப் படவும் நான் விடமாட்டேன். ஒரு வேளை... ஒரு வேளை சீனிவாசன்தான் என்று ஆகிவிட்டால், அவனுக்கு உதவி செய்து முன்னுக்குக் கொண்டு வருவேன். எனக்கு வேண்டியவர் ஒருவர், சினிமாத் தொழிலில் ஃபைனான் ஸியராக இருக்கிறார். எனக்காக எதுவும் செய்வார். அவர் மூலமாக சீனியை எப்படியாவது உள்ளே புகுத்தி உயர்த்திவிடலாம்.''

அவன் பேசப் பேசக் கண் கலங்க அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள் மந்தாகினி. இப்படி ஒருவனைத் தங்கை உணராமலே இருந்து விடுவாளோ என்று அவளது நெஞ்சம் பதைத்தது.

மறுநாள் காலையில், தங்கையிடம் அன்று அவள், தமிழ்தாசனை எப்போது சந்திக்கப் போகிறாள் என்று விசாரித்தாள் மந்தாகினி.

மாதங்கினி யோசனையாக நோக்கவும், ''ஆமாண்டி அவனைக் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகப் பகிரங்கப் பிரகடனம் செய்து விட்டாய். இனி அது எப்போது, எங்கே என்று அவனோடு பேசி முடிவு செய்ய வேண்டாமா? ஆனால் எனக்கு ஒரே ஒரு சின்ன உதவி செய். உங்கள் சந்திப்பு கிந்திப்பை எல்லாம் இந்த வீட்டுப் பக்கம் இல்லாமல் - இந்த ஏரியாவிலேயே இல்லாமல் வேறே எங்கேயாவது வைத்துக் கொள் - வேறே ஏதாவது பூங்கா, ஒட்டல், சினிமா, என்று போய்ப் பார்த்துப் பேசுங்கள். இந்தா இது சீனு.. இல்லை, தமிழ்தாசன் - தமிழ்தாசன் தானா அல்லது மாதங்கினிதாசனா? - அவன் ஒட்டிக் கொண்டிருக்கும் நண்பன் வாடகைக்கு இருக்கும் வீட்டு டெலிஃபோன் நம்பரைக் கூப்பிட்டு, எங்கே எப்போது சந்திப்பது என்று முடிவு செய்'' என்று டெலிஃபோன் எண் எழுதிய காகிதத்தைக் கொடுத்தாள்.

ஐயத்துடன் நோக்கி, ''என்ன கதை மாறுகிறது?'' என்று விசாரித்தாள் மாதங்கினி.

இந்தக் கேள்வியை எதிர்பார்த்து, சிவா அவளுக்குக் கற்பித்திருந்த பதிலை நினைவு கூர்ந்து, ''பின் என்ன? பத்துப் பனிரெண்டு நாட்களில் அப்பா வந்து நிற்பார். அவருக்குப் ஒரு பதில் சொல்லியாக வேண்டுமில்லையா? நீ பாட்டில் ரப்பராக இழுத்தால், பிறகு நானல்லவா வறுபடுவேன்! இந்த ஏரியா பக்கம் உங்கள் சந்திப்பு வேண்டாம் என்றதற்குக் காரணம், ''பார்த்துக் கொண்டு சும்மா இருந்தாயா? என்று அப்பா என்னைத் திட்டிவிடக் கூடாது என்றுதான்!'' என்று குரலில் மிகுந்த அலுப்பு காட்டினாள் தமக்கை.

அன்று மாலையில் சீனுவாசனும் மாதங்கினியும் சந்திக்கத் தேர்ந்தெடுத்த பூங்கா, அவர்கள் வசித்த



குடியிருப்பைத் தாண்டி, அதற்கு அடுத்த பகுதியில் இருந்தது.

எப்படியும் தந்தை தன்னை வெறுத்துவிடப் போவது உறுதி; இந்த அக்கா வேறு அனாவசியமாய் அப்பாவிடம் பேச்சுக் கேட்க வேண்டுமா என்ற எண்ணம் மாதங்கினிக்கு. அதுவும் அக்காவின் மேல் பிழை ஏதும் இல்லாதபோது. அதிலும், இவளது முடிவால் ஏற்கனவே மந்தாகினிக்கு எவ்வளவோ தொல்லை! எனவே தமக்கை கேட்டுக் கொண்டதற்கு இணங்கி, அந்தப் பகுதியில் இல்லாத, ஆனால் ரொம்பவும் அதிகத் தூரம் செல்ல வேண்டியிராத ஓர் இடமாக இந்தப் பூங்காவுக்கு சீனிவாசனை வரச் சொன்னாள் அவள்.

வீடு திரும்ப அதிக நேரம் ஆகிவிடக்கூடாது என்று மாதங்கினிக்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்தி யிருந்தபோதும், மாதங்கினி அவனிடம் சொன்ன நேரத்துக்கு அரைமணி நேரம் தாமதமாகவே சீனிவாசன் வந்து சேர்ந்தான்.

வரும்போதே முக்கி முனகிக் கொண்டு வந்தான். ஏறி வந்த சைக்கிளை ஒரு புறம் சாய்த்துவிட்டு, ''என்னை இவ்வளவு தூரம் இழுத்து கஷ்டப்படுத்தி விட்டாயே, கண்மணி! பாதி தூரம் வந்து, மேலே நடக்க முடியாமல் திரும்பிப் போய், நடேசன் பேரைச் சொல்லி வாடகை சைக்கிள் எடுத்து வந்தேன். அப்...பாடி'' என்று காலை நீட்டிக் கொண்டு அமர்ந்தான்.

பாதித் தூரம் வந்தவன், மீண்டும் திரும்பிச் சென்று வருவதற்குப் பதிலாக நேராக வந்திருந்தால் நேரம் மிச்ச மாயிருக்குமே என்று எழுந்த எரிச்சலை அடக்கிக் கொண்டு பேசாதிருந்தாள் மாதங்கினி. அத்தோடு ஒரு பெண்ணான அவளால் நடக்க முடிகிறபோது அவனால் முடியவில்லை என்றால் எப்படி?

சரி சரி... இதெல்லாம் ஒன்றுமில்லாத சின்ன விஷயம் என்று தன்னைத்தானே சமனப்படுத்திக் கொள்ள அவளுக்கு சற்று நேரம் பிடித்தது.

''அதற்குள், ''ஆகா! மஞ்சள் வெயில் மாலை, வண்ண மலர்ப்பூங்கா இதில் பஞ்சவர்ணக் கிளி போல இந்தப் பாவை எழில் என்னை... என்னை பித்தனாக்குகிறதே! மாதங்கினி, இந்த மாலை வெயிலில் தங்கத்தை உருக்கி வார்த்தாற்போல நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய்!'' என்று புகழாரம் சூட்டினான் சீனிவாசன்.

ஏனோ பழைய லயிப்பு அவளுக்கு வர மறுத்தது. தாமதமாக வந்து விட்டு ஐஸ் வைக்கிறான் என்று மனம் முரண்டியது.

அவனது வர்ணனையோடு, தன் எரிச்சலையும் ஒதுக்கிவிட்டு, முன் தினம் நடந்ததைப் பற்றி அவனிடம் சொன்னாள். ''அப்பா வருமுன், நம் திருமணம் எப்போது எப்படி என்பது பற்றி ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டும், எதிர்காலம் பற்றியும்தான்; நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

''அ...து நான்.. எல்லாம் நீ சொல்கிறபடி செய்வோம். எனக்கு... இப்போது ஒரு பெரிய சிக்கல்...''

''என்ன சிக்கல்?'' என்று கவலையுடன் கேட்டாள் மாதங்கினி.

''தங்கம், வங்கம், பங்கம் என்று மூன்று சரியாக வருகிறது. நாலாவது குழப்புகிறது. உனக்கு ஏதாவது ஐடியா வருகிறதா? பாரேன். கேள்; மாலை வெயில் பட்டால் மங்கை நீ தங்கம்; காலை நனைக்கும் கடலின் பெயரோ வங்கம்; அருகில் நீ இல்லாவிடில் நேரும் எனக்கு பங்கம்...! அப்புறம்தான் வரமாட்டேன் என்கிறது...''

''தமிழ்தாசன் நான் ஒரு முக்கியமான விஷயமாய் நம் எதிர்காலம் பற்றிப் பேசிக் கொண்டு இருக்கிறேன்.



நீங்களானால் வங்கம் பங்கம் என்று பேத்திக் கொண்டு இருக்கிறீர்களே! பத்து நாளில் என் அப்பா சிங்கம் போல் வந்து நிற்கப் போகிறார். நாம் சுண்டெலி மாதிரி...''

''ஆகா!'' என்று கூவினான் தமிழ்தாசன்..! வந்துவிட்டது. வந்து விட்டது. சிங்கம்! சிங்கம் என்று சொல்லைக் கொடுத்து உதவினாயே, நன்றி கண்மணி. இதோ கடைசி வரி. உன் கடைக் கண் பார்வையில் நான் சிங்கம், மறக்கும் முன் எழுதி விடுகிறேன்...'' என்று தோளில் மாட்டியிருந்த பையைத் திறந்தான்.

உள்ளே கசங்கிக் கிடந்த காகிதங்களில் ஒன்றைத் தேடி எடுத்து எழுதத் தொடங்கினான்.

சுற்றிக் கவிந்து வந்த இருட்டில் எழுதுவது கடினமாக இருக்கவே, ''சே, இருட்டில் எழுதவே முடியவில்லை. அறைக்குப் போய்த் தான் எழுத வேண்டும்...'' என்றபடி கையில் இருந்த பால்பென், பேப்பரை பையினுள் வைத்தவன், அருகில் இருந்தவளிடம் வருகிறேன் என்று கூடச் சொல்லாமல், சாய்ந்து கிடந்த சைக்கிளை எடுத்து, அதில் ஏறிக் கிளம்பிச் சென்று விட்டான்.

சற்று நேரம் மாதங்கினி விக்கித்துப் போய் அமர்ந்திருந்தாள்.

## 6

'அவனை நம்ப முடியாதும்மா...'

அக்கா சொன்னாளே, அது இதுதானா?'

இருட்டுவேளை புதிய இடம்; இளம் பெண்.

ஒன்றிரண்டு நகை நட்டு வேறு. இவள் தைரியமாகத் தனியே திரும்பிச் செல்ல இங்கென்ன ராமராஜ்யமா நடக்கிறது?

திரும்பிச் செல்கிறபோது இவளுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் என்கிற எண்ணம் கூட இல்லாமல்... ஏன், அவளைப் பற்றிய நினைப்பே இல்லாமல் கிளம்பிப் போய்விட்டானே!

'இந்தப் பக்கம் பயம் கிடையாது என்றாலும் நீங்கள் பாதுகாப்பாய் வீட்டினுள் செல்வதைப் பார்த்து விட்டால் எனக்கு நிம்மதியாக இருக்கும்' என்று முன்தினம் ஓர் ஆழ்ந்த குரலில் கூறியது அநியாயமாய் நினைவு வந்தது கண்ணைக் கரிக்கச் செய்தது.

சோர்வுற்று இரண்டு சொட்டு கண்ணீர் வடித்தவள், உடனேயே நிமிர்ந்தாள்.

கூடாது. இப்படி ஒத்திட்டுப் பார்ப்பது தப்பு. சிவா ஏற்கனவே நல்ல நிலைமையில் இருப்பவர். சீனி... தமிழ்தாசன் முதல்படியில் கூட ஏறாதவர். அதிலும் மூளை வேலை செய்கிற கவிஞர். 'மெய் வருத்தம் பாரார்; பசி நோக்கார்; கண் துஞ்சார்; எவ்வெவர் தீமையும் மேற் கொள்ளார்; என்றெல்லாம் 'கருமமே கண்ணாயினார்' பற்றிக் கூறுவது போல அவரும் கவிதை தவிர வேறு எந்த எண்ணமும் இல்லாமல் இருந்தால் தான் உருப்பட முடியும். அப்படி அவர் இருப்பதைப் போற்ற வேண்டுமே தவிர குறைப்படக் கூடாது. அதைவிட, இன்னமும் இருட்டாகு முன் கிளம்பி வீடு போய்ச் சேர்வதுமேல்.

இப்படி எல்லாம் தனக்குத்தானே எடுத்துக்கூறி, தன்னைத்தானே தேற்றிக் கொண்டு மாதங்கினி வேகமாக வீடு நோக்கி நடக்கத் தொடங்கினாள். ஆனால் தெரு விளக்குகள் எரியாததால் மேலும் அதிகப்பட்ட இருட்டும், ஆள் அரவமற்ற தனிமையும் அவளைப் பயமுறுத்தவே



செய்தன. அப்போது மட்டும் ஓர் ஆட்டோவோ, டாக்சியோ கிடைக்குமானால், மூன்று மடங்கு பணம் கொடுத்துச் செல்லக்கூட அவள் தயாராக இருந்தாள். ஆனால் அது ஏதும் கண்ணில் படாததால் முருகா முருகா என்று உருப்போட்டபடி வேகமாக நடந்தாள்.

இந்த சமயத்தில், ஒரு கார் வரும் ஓசை கேட்டதோடு, விளக்கொளி வெளிச்சமும் தெரிந்தது. ஆனால் அந்தக் கார் அவளைத் தாண்டிச் செல்லாமல், பின் தொடர்வது போலத் தோன்றவும், மிரண்டு போய் ஓடத் தொடங்கினாள். காரும் வேகம் எடுத்து அவளை ஓட்டி வந்து, 'பிரேக்', போடவும் மாதங்கினிக்கு மூச்சே நின்றுவிட்டது.

ஆனால் நின்ற காரிலிருந்து, ''மாதங்கினி'' என்ற அழைப்புடன் சிவா, இறங்கி வரவும், எல்லையில்லா ஆறுதலில் அவளுக்கு அங்கமெல்லாம் தோய்ந்தது. தாங்கலுக்கு அந்த மாருதி காரைப் பற்றியிராவிட்டால், கால் மடிந்து கீழே விழுந்திருப்பாள் எனலாம்.

அருகில் வந்து, ''மாதங்கினி, நீங்கள் தன்னம் பிக்கையும் துணிச்சலும் உடைய புதுமைப் பெண் என்பது எனக்குத் தெரியும். ஆனால் மகாத்மா காந்தி சுயராஜ்யம் பற்றி எவ்வளவோ கனவு கண்டார். கழுத்து நிறைய நகைகளோடு ஓர் இளம் பெண் தனியாய் பயமின்றிப் பயணம் செய்ய முடிகிற ராமராஜ்யம் இந்தப் பாரத தேசத்தில் இருக்கும் என்று நினைத்தார். ஆனால் நடப்பு அதுவல்ல மாதங்கினி. பெண் என்கிற உருவம் இருந்தாலே போதும், தூக்கிச்சென்று தொழில் நடத்தக் கூடிய ஆபத்து இப்போது இருக்கிறது. அதனால் பழக்கமற்ற இடங்களுக்கு இந்த நேரத்தில் தனியே வரவேண்டாம்... ஒரு நல்ல நண்பனாக நான் சொல்வதைத் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டீர்கள் என்று நம்புகிறேன்...'' என்று இழுத்தான் சிவா.

திரும்பும்போது சீனிவாசன் துணை வருவான் என்று நம்பிவந்ததாகச் சொல்லமாட்டாமல் சும்மா தலையசைத்தாள் மாதங்கினி.

''ஒகே. சொல்லுங்கள். இப்போது உங்களோடு நானும் நடக்கட்டுமா? அல்லது காரில் உங்களை வீட்டில் கொண்டு போய் விடட்டுமா?''

''வே... வேண்டாம். நம் காலனிக்குப் போகிற பஸ் நிறுத்தம் எதிலாவது விட்டால் போதும்'' எனறாள் மாதங்கினி, எழும்பாத குரலில்.

''ஏனோ? அந்த பஸ் செய்த புண்ணியம் என் கார் செய்யவில்லையா? அது பாவம், என்ன பாவம் செய்ததாம்?''

''உ... உங்களுக்கு வீண் சி.. சிரமம்...!'

''எப்படி? நானா உங்களைச் சுமந்து செல்லப் போகிறேன்? அந்தப் பாக்கியம் பெறப்போவது கார்தான். சுமந்து செல்வதற்காகவே அமைக்கப்பட்ட இயந்திரம். வாருங்கள். எனக்கும் அப்படியே உங்கள் வீட்டு முறுக்கு கொஞ்சம் கிடைத்தாலும் கிடைக்கக்கூடும்.''

''கட்டாயம்!'' என்றாள் அவள் ஆர்வத்தோடு.

காலத்தில் அவன் செய்யும் உதவிக்கு ஏதோ சிறு நன்றியாவது செய்ய முடிகிறதே!

காரில் ஏறியதும், ''சீட்பெல்ட் போட்டுக் கொள்கிறீர்களா? நான் கவனத்தோடுதான் ஓட்டுவேன். அதிலும் இப்படி ஒரு பொக்கிஷத்தை அழைத்துச் செல்லும்போது அதி ஜாக்கிரதையாகத்தான் இருப்பேன். ஆனால், நமக்கு முன்னே பின்னே செல்கிறவர்களைப் பற்றித் தெரியாதில்லையா? அதனால்தான்'' என்று பெல்ட்டை இழுத்து மாட்டிவிட்டான்.



அந்தச் சில வினாடி அருகாமை ஒரு பாதுகாப்பான உணர்வைத் தர நிம்மதியோடு இருக்கையில் சாய்ந்து கொண்டாள் மாதங்கினி. தமிழ்தாசனைப் போல வெளிப் படையாகப் புகழாவிட்டாலும், அந்த 'புண்ணியம், பாக்கியம், பொக்கிஷம்' என்ற வார்த்தைகள் உள்ளூர ஒரு பூரிப்பைத் தந்தன. எண்ணி எண்ணி ரசிக்க வைத்தன.

காரை நல்ல நிலைமையில் வைத்திருந்ததாலோ என்னவோ, கார் வழுக்கிக் கொண்டு செல்வதுபோல இருந்தது.

ஒருவன் தன் குதிரையைப் பராமரிக்கும் விதத்தைக் கொண்டு அவன் தன்னுடைய மனைவியை எப்படி வைத்துக் கொள்வான் என்பதை அறியலாம் என்பார்கள்.

அன்று குதிரை, இன்று கார், ஸ்கூட்டர், சைக்கிள்... என்று ஏதோ ஒரு வாகனம். தமிழ்தாசன் சைக்கிள்கூட இல்லாதவன் என்பது அவளுக்குக் குறையாகத் தெரியவில்லை. பணம் இன்று வரும் நாளை போகும். ஆனால், அவன் அவ்வப்போது எடுத்து வரும் வாடகை சைக்கிளை, ஸ்டான்டு போடாமல், எங்கேனும் சாய்த்தும் அதற்கு வசதியில்லாத இடத்தில் தரையோடு கிடத்தியும் அவன் வைப்பது நினைவு வந்தபோது அவளுக்குக் கஷ்டமாக இருந்தது. வாகனம்தான் என்று இல்லை. அவனது அழுக்குத் தோள்பையும், அதில் காகிதங்களையும், பேனாவையும் கண்டபடி திணிப்பதும் சீராக வெட்டப்படாத ஒழுங்கற்ற நகங்களும்...

மாதங்கினியின் பார்வை தானாக, ''ஸ்டியரிங் வீலில்' இருந்த சிவாவின் கைகளின் பக்கம் சென்றது.

இருள் சந்து தாண்டி, ஒழுங்காகத் தெரு விளக்குகள் எரியும் சாலைக்குக் கார் வந்துவிட்டபடியால், காருக்குள் பாய்ந்த வெளிச்சத்தில், சிவாவின் அளவாக வெட்டப்பட்டு

ஆரோக்கியமாய்ப் பள்பளத்த நகங்களும் வலிவும் வனப்புமான விரல்களும் அவளது கண்களில் பட்டுக் கருத்தில் பதிந்தன.

என்னவோ பாரம் இதயத்தை அழுத்துவது போல உணர்ந்தவள், மனதை வேறு திசையில் திருப்ப எண்ணி, ''இந்த நேரத்தில் இங்கே எங்கே வந்தீர்கள்?'' என்று விசாரித்தாள்.

''அதுவா? வேலை முடிந்து வீட்டுக்குப் போனால்... என்னவோ மனதுக்குக் கொஞ்சம் சோர்வாக இருந்தது. அங்கேயே சும்மா இருந்தால் அது அதிகமாகி விடும் என்று, காரை எடுத்துக் கொண்டு கண் போன வழி சுற்றினேன். பார்த்தால், வழியில் எதிர்பாராத அதிருஷ்டமாக உன்னைக்... சாரி... உங்களைக் கண்டேன்.'' என்று ஒரு கணம் அவளை நோக்கிப் புன்னகை பரிந்துவிட்டு மீண்டும் சாலையின் புறம் கவனத்தைத் திரும்பினான் சிவா.

'புண்ணியம்', 'பாக்கியம்', 'பொக்கிஷ'த்தோடு 'அதிர்ஷ்டம்'.

''அந்த 'உங்களை' வேண்டாம் உன்னை என்றே சொல்லுங்கள்...'' என்றாள் மாதங்கினி மெல்லிய குரலில்.

மீண்டும் தமிழ்தாசனோடு, முன்பின் அறிந்திராத தனியிடம் சென்று விஷப்பரீட்சை செய்ய மனம் வராமல் மாதங்கினி தயங்க, தந்தை வருமுன் ஒரு முடிவு எடுக்கும்படி அவளுடைய தமக்கை அவளை விரட்டி யடித்தாள்.

ரொம்பவும் யோசித்ததில் ஒரு ஓட்டலில் அமர்ந்து பேசுவது மேல் என்று மாதங்கினிக்குத் தோன்றியது. ஏனெனில் இப்படி இடைவழியில் கவிராயன் எழுந்து போய்விட்டால்கூட தனித்து நின்று தவிக்க வேண்டியிராது.



ஓட்டலில் உண்ண வந்த மற்றவர்கள், வேலை செய்பவர்கள் என்று ஆட்கள் இருப்பார்கள்! இருட்டும் வராது.

ஏதாவது ஓட்டலில் போய்ப் பேசலாமா என்று மாதங்கினி கேட்டதும் சீனிவாசனுக்கு ஒரே மகிழ்ச்சி. உடனே ஒத்துக் கொண்டவன், ''நான்கூட உன்னை ஓட்டல் சுவர்க்கலோக'த்துக்கு அழைத்துப் போக வேண்டும் என்று நினைத்திருந்தேன்.'' என்று கூறவும் மாதங்கினிக்கு ஒரே ஆச்சரியம்.

அவனே அழைத்துப் போக நினைத்தானாமே!

ஏதோ ஒரு அரசியல் கட்சியின் போஸ்டருக்காக வசனம் எழுதிக் கொடுக்கும் வேலை ஒன்றை நடேசன் தன் நண்பனுக்காக வாங்கிக் கொடுத்திருந்தது அவளுக்குத் தெரியும். அதில் நிறையப் பணம் வந்திருக்கக் கூடும் என்று அவள் ஊகித்தாள். இல்லாவிட்டால் நகரிலேயே விலை உயர்ந்த ஓட்டல்களில் ஒன்றான 'சுவர்க்க லோகத்துக்கு அவளை அழைத்துப்போக எண்ணியிருக்க மாட்டான்! ஆனாலும் வந்த பணத்தை உடனே செலவழித்து விடவேண்டுமா?'

''அவ்வளவு உயர்ந்த ஓட்டல் எதற்காக, தமிழ்தாசன், வீண் செலவு. சும்மா சாதாரணமாக...'' என்றவளை இடைமறித்து, ''என் மகாராணிக்கு இதுவெல்லாம் சாதாரணம். அற்பக் கொசு மாதிரி. இந்தப் பேரெழில் பொக்கிஷம் வசிக்கத் தகுதியான இடம் அந்த ஓட்டலின் 'ராயல் ஸுட்' தான் தெரியுமா?''

அன்றையத் தேதியில் அந்த 'ராயல் ஸுட்டின் வாடகை ஒரு நாளைக்கு ஏழாயிரம் ரூபாய்! அவ்வளவு உயர்வான நிலையில் மாதங்கினியை வாழ வைக்க ஆசைப்படுகிறானே இவன்!

மாதங்கினி பூரித்துப் போனாள்.

அன்று மாலையில் ஒரு டாக்சியுடன் தமிழ்தாசன் வீட்டுக்கு வந்துநின்றபோது அவளுக்கு ஒருபுறம் மகிழ்ச்சியோடு சற்றுக் கலக்கமாகவும் இருந்தது. ''நான்தான் ஆட்டோவில் அங்கே வந்து விடுவதாகச் சொன்னேனே?'' என்றாள் தனிந்த குரலில்.

''அந்த ஓட்டலுக்கெல்லாம் ஆட்டோவில் செல்வது கேவலம் என்று நடேசன் சொன்னான். கார் அல்லது டாக்சிதான் மரியாதையாம். அத்தோடு இந்த அழகுப் புதையலை ஆட்டோவில் ஏற்றிக் குலுக்கி உலுக்குவதா? என் இதய ராணிக்கு ஏற்ற வாகனம் கார்தான்.'' என்று திட்டவட்டமாக அறிவித்தபோது மாதங்கினிக்குப் பெருமைதான்.

ஆனால், அந்தக் குடியிருப்புப் பகுதியில் இருவரும் சந்திப்பதுகூடத் தன்னைப் பாதிக்கும் என்று தமக்கை என்ன சொல்லுவாளோ என்ற ஒரு கலக்கம்தான் அவளுக்கு. ஆனால் வியக்கத்தக்க வகையில் மந்தாகினி ஒன்றும் சொல்லாமல், நல்லபடியாகவே வழியனுப்பி வைத்தாள்.

டாக்சிக்கு செலவழிக்கும் அளவு தமிழ்தாசனுக்கு வசதி வந்துவிட்டதால் அக்கா வாயை மூடிக் கொண்டாள் போலும் என்று ஏளனமாக எண்ணும்போது மாதங்கினிக்குக் கொஞ்சம் வருத்தமாகவும் இருந்தது. இப்படிப் பணமே பிரதானம் என்று எண்ணும் அளவுக்கு இறங்கி விட்டாளே இந்த அக்கா!

சிறு வயதிலிருந்தே இருவரும் சேர்ந்து வளர்ந்தது, ஒத்தமனமாய் இருவரும் ஒருவருக்கொருவர் எண்ணங் களைப் பரிமாறிக் கொள்வது என்று எல்லா வற்றையும் எண்ணிப் பார்த்தவளுக்கு, இன்று இருவரும் முரண்பட்டு நின்ற நிலை மிகவும் வேதனையைத் தந்தது.



ஆனால், இப்போது அக்கா கொஞ்சம்... மாறி யிருக்கிறாள். அன்றுகூட, தாசனைப் பார்க்கச் சென்றவள், சிவாவோடு காரில் வந்து இறங்கியது பற்றி குத்திப் பேசவே இல்லை.

தமக்கையைப் பற்றிய யோசனையில் ஆழ்ந்து விட்டவளுக்கு கார்க் கதவு திறந்து மூடும் சத்தம் கேட்ட பிறகுதான் நிகழ்காலம் நினைவு வந்தது.

தமிழ்தாசன் காரிலிருந்து இறங்கி முன்னே நடப்பதையும் டிரைவர், அவள் பக்கக் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு நிற்பதையும் கண்டு வெட்கி, அவசரமாக இறங்கி, தமிழ்தாசனை பின் தொடரலானாள்.

''அம்மா, டாக்சி பணம்?'' என்று டிரைவரின் குரல் அவளைத் தடுத்தது.

திகைப்புடன் தமிழ்தாசனை நோக்கியவள், அவன் ஓட்டலின் நீளமான சிறுபடிகளில் ஏறத் தொடங்குவதைக் கண்டதும் அவசரமாகக் கைப் பையைத் திறந்து மீட்டர் பார்த்துப் பணத்தைக் கொடுத்துவிட்டு விரைந்தாள்.

''ரிசர்வேஷன்'' பற்றிப் பார்க்கச் செல்லும் வேகத்தில் அவன் டாக்சிப் பணம் பற்றி நினைக்க மறந்திருப்பான்!

ஒரு வழியாக, உணவறைக்குள் தமிழ்தாசன் நுழைந்து கொண்டு இருக்கையில், அவனை எட்டிப் பிடித்தாள் மாதங்கினி.

உணவறைக்குள் சென்று பார்த்தால் அந்த மிகப் பெரிய ஹாலில் அவர்கள் இருவருக்கு மட்டும் உட்கார இடம் இல்லை. ஒவ்வொரு மேஜையிலும் ஒன்று, உணவை எதிர்பார்த்துக் கொண்டோ அல்லது சாப்பிட்டபடியோ ஆட்கள் உட்கார்ந்திருந்தார்கள். அன்றிக் காலியாகக் கிடந்த மேஜைகளில் 'ரிசர்வ்' என்று ஆங்கிலத்தில் தெளிவாக எழுதப்பட்ட அழகிய நீண்ட முப்பட்டை வடிவ

மரக்கட்டைகள், நன்றாகக் கண்ணில் படும் விதமாக வைக்கப்பட்டிருந்தன.

அந்த அறிவிப்பைக் கவனியாமலோ என்னவோ, ஒரு மேஜைக்குச் சென்று நாற்காலியை இழுத்து ஜம்மென்று உட்கார்ந்து விட்டான் தமிழ்தாசன். அவன் அப்படி உட்கார்ந்ததால், அது தங்களுக்காக ஒதுக்கப்பட்ட மேஜை என்று எண்ணி மாதங்கினியும் அமர்ந்தாள்.

அதே சமயத்தில், மேலும் இருவரை - மிகமிக நாகரிகமாக உடை அணிந்த இருவரை வழிகாட்டி அழைத்துக் கொண்டு வந்த ஒரு சீருடை அணிந்த பணியாள், அந்த மேஜை அவன் அழைத்து வந்தவர்களுக்காக ஒதுக்கப்பட்டது என்று கூறி இவர்கள் இருவரையும் எழுப்பி விட்டான்.

படிப்பறிவு இல்லாத பட்டிக்காட்டு ஜென்மம் என்பது போல அந்தப் பெண்ணின் ஏளனமான பார்வையில் மாதங்கினி கூசிப் போனாள். அவளிடம் போய், என் தப்பல்ல, என் கூட வந்தவனின் பிழை என்று சொல்ல முடியுமா அல்லது யாரோ ஒரு பெண்ணிடம் போய், பிற்பாடு வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளப் போகிற வனைக் காட்டிக் கொடுக்கத்தான் முடியுமா?

உள்ளே குமுறுவதை வெளிக் காட்டாமல், கற்சிலை போல முகத்தை வைத்துக் கொண்டு அழைத்து வந்தவன், அருகில் அசையாமல் நின்றான்.

சீனிவாசன், யாரிடமாவது கேட்டு ஏதாவது செய்வான் என்று எதிர்பார்த்தால் மரமாய் சும்மா நின்றானே தவிர அவன் அசையக் கூட இல்லை.

இன்னுமொரு சீருடைப் பணியாள் வந்து, அவர்களைப் பெயர் விசாரித்துவிட்டு, அவர்கள் பெயரில் எந்த முன் பதிவும் இல்லாததோடு இப்போது வேறு இடமும்



இல்லை என்பதால், வெளியே போய் லாபியில் காத்திருக்குமாறு கூறினான்.

அதாவது கழுத்தில் கை வைத்துத் தள்ளாமல் நாகரிகமாக ''வெளியே போ'' என்றான்.

அங்கிருந்த அனைவருமே அவர்களை இளக்காரமாகப் பார்ப்பது போல மாதங்கினிக்கு ஒரு பிரமை.

குன்றிக் குறுகி, குனிந்த தலை நிமிராமல் வேகமாக அங்கிருந்து வெளியே செல்ல முயன்றவளின் அன்றைய அவமானக் கதை அத்தோடு முடிவதாக இல்லை. ஏனெனில் அவர்கள் இருவரும் வெளியேறுவதற்காக அந்த அறையின் அலங்காரக் கதவை நெருங்கியபோது, வெளியிலிருந்து உள்ளே வந்தவன் சிவா!

இவர்களைக் கண்டதும், மகிழ்ச்சியோடு, ''ஹலோ'' என்றபடி அருகில் வந்தான். ''கிளம்பி விட்டீர்களா? என்ன சாப்பிட்டீர்கள்? சுவை பிடித்ததா?'' என்று இயல்பாக விசாரித்தான்.

தெளிவற்று ஏதோ முணுமுணுத்து விட்டு, வெளியேறி விடத் துடித்த மாதங்கினி கன்றிச் சிவந்து நிற்க, வெயிட்டரும் சீனுவாசனுமாக நடந்ததை விவரித்தனர்.

''அச்சச்சோ!'' என்று சிவா அனுதாபப்பட்டபோது, அப்படியே தரை வெடித்து உள்ளே போய் விட மாட்டோமா என்றிருந்தது அவளுக்கு. இது மாதிரியான ரோஷமெல்லாம் இந்த சீனிவாசனுக்குக் கிடையாதா? சாதாரணமாகச் சொல்லுகிறானே? வீட்டில் சிவாவை மணக்கச் சொல்வது அவனும் அறிந்த விஷயம்தானே!

மூச்சு விடக்கூட முடியாததுபோல உள்ளே இறுகிப் போய் மாதங்கினி நிற்க, சிவா அவர்களுக்கு உதவியாக ஓர் ஏற்பாடு செய்தான்.

அவனுடைய, தொழில் துறை நண்பர் ஒருவரோடு 'பிசினஸ்' பேசியபடி சாப்பிடலாம் என்று திட்டமாம். அவர், வயிறு சரியில்லை, பலமாக எதுவும் வேண்டாம் என்கிறாராம். லேசாக கொறிப்பதற்கு இந்த ஓட்டலின் காஃபி ஷாப் போதுமானது. அதற்கு முன்பதிவு ஏதும் அவசியமில்லை. எனவே, சிவா அவனுடைய நண்பரோடு காஃபி ஷாப்புக்குப் போய் விடுகிறானாம். இவர்கள் இருவரும், இங்கே அவன் பதிவு செய்த இடத்தில் அமர்ந்து சாப்பிடலாமாம்.

சாலையில், அவளுக்கு அவன் உதவி செய்தது வேறு விதம்.

இங்கே, அந்த சிவாவை மறுதலித்து மாதங்கினி யாரைத் தேர்ந்தெடுத்தாளோ அந்த சீனிவாசனுக்கும் சேர்ந்து அதே சிவாவின் உதவி தேவைப்பட்டது என்றால், அவளுக்கு மிகவும் அவமானமாக இருந்தது. அதை ஏற்பது மிகவும் கேவலமாகப்பட்டது.

'எங்களுக்கு பசி இல்லை; நாங்களும் பேசுவதற்காகத்தான் வந்தோம்' என்று கிளம்பி விடலாமா என்று அவள் யோசிக்கும்போதே, சீனிவாசன் மிகுந்த மகிழ்ச்சியோடு, ''எங்கே, இங்கே சாப்பிட முடியாமல் போய் விடுமோ என்று ரொம்பவும் கவலையாக இருந்தது. நல்லவேளை உங்களால் அந்தக் கவலை தீர்ந்தது, நன்றி சார். அப்புறமாய் என் நன்றியைத் தெரிவிக்க ஒரு பாடல் எழுதித் தருகிறேன்'' என்று வழியவும் அவளுக்கு இன்னமும் தலை குனிவாக இருந்தது.

''நன்றி'' என்று சுருக்கமாக முணுமுணுத்துவிட்டு சீனிவாசனைப் பின் தொடர்ந்தாள்.

ஆனால், அங்கே ஒரு சிறுவனின் ஆர்வத்துடன், ''இதெல்லாம் நன்றாயிருக்கும் என்று நடேசன்



சொன்னான்.'' என்று விதவிதமாய் உணவு வகைகளுக்கு அவன் 'ஆர்டர்' கொடுப்பதைக் காண்கையில் அவள் மனம் இளகிவிட்டது.

பாவம். இல்லாத கொடுமை. நல்ல சாப்பாடாக மாதத்திற்கு எத்தனை நாள் சாப்பிட்டானோ? இன்று வருமானம் என்று வந்த உடனேயே வயிற்றுத் தேவைதான் முதன்மையாகத் தெரிகிறது!

ஆனால் என்னதான் தமிழ்தாசன் மீது பரிவு ஏற்பட்ட போதும் சுவை படத் தயாரித்திருந்த அந்த உணவு மட்டும் ருசி கெட்டு, மரத்தூளாய் மாதங்கினியின் தொண்டையில் சிக்கியது. சற்றுமுன்பட்ட அவமானம் மீண்டும் மீண்டும் நினைவு வந்து உணவை வெறுக்கடித்து விட, அவளுக்காக வரவழைத்ததையும் சேர்த்து உண்ணும்படி தாசனிடமே கொடுத்து விட்டாள்.

ஒருவாறு உண்டு முடித்ததும் பில் வந்தது.

கையை நீட்டிய தமிழ்தாசன் பில்லை எடுக்காமல். அருகே தட்டில் இருந்த இனிப்பான வாசனைப் பாக்கு பெருஞ்சீரகக் கலவையில் ஒரு குத்து அள்ளி வாயில் போட்டு மென்றபடி வசதியாக இருக்கையில் சாய்ந்து கொண்டு சுற்று முற்றும் பார்க்கலானான்.

மீண்டும் மாதங்கினிக்கு வயிற்றுக்குள் பிசையத் தொடங்கியது. வெகுவாகத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ''தமிழ் பில்...'' என்றாள் மெதுவாக.

''என்னது? பில்லா? இதோ இருக்கிறதே... எவ்வளவுக்குச் சாப்பிட்டோம். அடேயப்பா அறுநூறு ரூபாய்! பயங்கர விலை இல்லை.? ஆனால் நல்ல ருசி. இப்படி ருசியாக நான் சாப்பிட்டதே இல்லை. ஏ...வ்... இந்தா பில்... பணத்தைக் கொடுத்துவிட்டு வந்தாயானால் கிளம்பி விடலாம். என்னமோ பேச வேண்டுமென்றாயே,

முன்னாலே 'லாபி' என்றானே, அங்கே உட்கார்ந்து பேசுவோமா?'

சீனிவாசன் பேச்சின் பிற்பகுதி மாதங்கினியின் காதுகளில் விழவே இல்லை. பணத்தைக் கொடுத்து விட்டு வந்தாயானால் என்ற வார்த்தைகளே அவள் காதில் திருப்பித் திருப்பி அலை மோதின.

'பணத்தைக் கொடுத்துவிட்டு வந்தாயானால்...!

அதாவது அவனுக்கு இந்த ஓட்டல் செலவுக்குப் பணம் கொடுக்கும் உத்தேசமே இல்லை.

எதிர்பார்த்த வருமானம் வந்ததோ, வரவே இல்லையோ? அதனால் அவனிடம் பணமும் இல்லை தானோ, என்னவோ? ஆனால் இப்போது அது பொருட்டல்ல.

செலவு செய்யப் பணமோ, மனமோ இல்லாதபோது இவ்வளவு பெரிய ஓட்டலுக்கு வருவானேன்? அவள் கேட்டாளா? இல்லையே!

ஆனால் அவன் நல்ல சாப்பாடு சாப்பிட வேண்டுமல்லவா? மான அவமானங்களைவிட அதுதானே முக்கியம் என்று மாதங்கினியின் மனம் கசந்து வழிந்தது.

## 7

**கை**யில் காசு இல்லாதபோது டாக்சி ஏன்? இவ்வளவு பெரிய ஓட்டலில் சாப்பாடு ஏன்? அந்தச் சாப்பாட்டிலும் இவ்வளவு எப்படிச் சாப்பிடலாம்? என்றெலாம் ஓவென்று கத்தி விளாச வேண்டும் போல ஆவேசம் வந்தது.



ஆனால் இப்போது சீனிவாசனை ஏசுவதும் திட்டுவதும் முக்கியம் அல்ல.

இந்த இடத்திலிருந்து மேற் கொண்டு, எந்த அவமானமும் நேராமல் வெளியேறுகிற வழியைப் பார்ப்பதுதான் தலையாய அவசியம்.

ஆனால் இல்லாதது என்று நிச்சயமாகத் தெரிந்த வழியை எங்கே தேடுவது?

நிராசையுடன் கைப்பையைத் திறந்து உள்ளிருந்து பணத்தை எண்ணிப் பார்த்தாள். ஒவ்வொரு நோட்டையும் பல தரம் பிதுக்கிப் பிரித்து மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்த்தாள். ஆனால் எத்தனை தரம் எண்ணினாலும் உள்ளே இருந்த நாலு நூறு ரூபாய் நோட்டுகள் எட்டாகி விடுமா? ஆகாதே! எதற்கும் இருக்கட்டும் என்று அவள் எடுத்து வந்த ஐநூறில் டாக்சிக்குக் கொடுத்த நூறு போக அவள் பையில் நானூறு இருக்க முடியும்.

பில் தொகை அறு நூறு. மீதி இருநூறு ரூபாய் இல்லாமல் இத்தனை பேர் நடுவில் அவமானப்படப் போகிறாள். அந்த இரண்டு நூறு ரூபாய் இப்போதைய இக்கட்டை நீக்குவதற்காக அவளுக்குக் கொடுக்க அங்கே யாரும் இல்லை...

யாருமே இல்லை என்று இல்லை. ஒருவன் இருக்கிறான் ஆனால் அவனிடம் போய் இன்னுமோர் உதவி - அதிலும் பண உதவி கேட்டுப் பெறுவதைவிட உயிரை விட்டுவிடலாம் என்று மாதங்கினிக்குத் தோன்றியது.

ஆனால் அப்படி நினைத்த மாத்திரத்தில், தன்னைத் தானே எரித்துக் கொண்டு உயிரை விட்டுவிட அவள் புராண காலப் பத்தினி அல்ல என்பதோடு, விஷயம் இத்தோடு நில்லாமல் கமலநாதனுடைய பெற்றோர் வரை சென்று கேவலப்படவும் நேரும் என்பதாலும், இந்த

அவமானம் தடுக்கப்பட்டு தீர வேண்டியது என்று சிவாவிடம் உதவி கேட்க மாதங்கினி முடிவு செய்தாள்.

வெறும் யோசனையில்கூட சீனிவாசன் தனக்கு உதவி செய்வதற்கில்லை என்பது உணர்ந்து வேகமாக யோசித்து திட்டமிட்டாள்.

அவனை அழைத்து, ''பாருங்கள் சீனிவாசன், நான் சற்று வெளியே சென்று வரப்போகிறேன். அதுவரை, நான் திரும்பி வரும்வரை இந்த இடத்தைவிட்டு அசையவே கூடாது. யார் என்ன சொன்னாலும் கேளாமல், இப்படியே அமர்ந்திருங்கள்'' என்று கூறிவிட்டு எழுந்தாள்.

கதவுப்புறமாய் நடந்தபடி, ஒரு பணியாளிடம், ''பாத்ரூம் எங்கே இருக்கிறது?'' என்று விசாரித்தாள்.

அவன் வழிசொல்லவும், நன்றி கூறி முறுவலித்து விட்டு, மடமடவென்று வெளியேறியவள் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

இங்கே காஃபி ஷாப் எங்கே இருக்கக் கூடும்? சற்றுத் திகைத்துவிட்டு, அந்த பக்கம் வந்த ஒருவரிடம் காஃபி ஷாப்பின் இருப்பிடம் விசாரித்து, அந்த வழியே நடந்தவளுக்கு திடீரென்று மூச்சு நின்றது.

ஒரு வேளை சிவா அங்கிருந்து கிளம்பி விட்டிருந்தால்?

ஐயோ! கூடாது. சிவா அங்கேதான் இருக்க வேண்டும்...

ஓட்டமும் நடையுமாக, மாதங்கினி, காஃபி ஷாப்பை நோக்கி விரைந்த போது, கும்பிடப் போன தெய்வமாக, சிவாவே எதிரில் வநதான்!

மாதங்கினியைக் கண்டதும், ''என்னம்மா, என்ன விஷயம்? ஏன் முகம் ஒரு மாதிரி இருக்கிறது? சீனுவுக்கு ஒன்றும் இல்லையே?'' என்று அக்கறையுடன் விசாரித்தான்.



'சீனுவுக்கு என்ன? வயிறு வீங்க உண்டுவிட்டு ஏசி சுகத்தை அனுபவித்துக் கொண்டு இருக்கிறானே. 'வெறென்ன' என்று வெடிக்க வேண்டும் போல இருந்தது அவளுக்கு. ஆனால் முடியாதே. அவளாகக் கண்களைத் திறந்து வைத்துக் கொண்டு தேர்ந்தெடுத்த மணவாளன் சீனிவாசன். அவனைப் பற்றி மற்றவரிடம் - அதுவும் குறிப்பாய் இவனிடம் குறை கூறுவது சாத்தியம் இல்லையே!

அவள் வாயை இறுக மூடி நிற்கவும், ''என்ன மாதங்கினி, என்ன பிரச்சனை? சொன்னால் என்னால் ஆனதைச் செய்கிறேன்'' என்றான் அவன் பரிவுடன்

இரண்டு நாட்களாகச் செய்து கொண்டேதான் இருக்கிறான். அவன் செய்யச் செய்ய, எந்தவிதப் பிரதியும் இல்லாமல் ஒரு வழிப்பாதையாக அவளும் பெற்றுக் கொண்டேதான் இருக்கிறாள்! சே. ஒரு பிரச்சனையும் இல்லை என்று போக முடிந்தால் தன்மானம் சிறிதேனும் மிஞ்சும். ஆனால்.. அவனிடம் கையேந்தியே தீர வேண்டியிருக்கிறதே!

சிவாவிடம் கேட்கத்தான் மாதங்கினி அவனை நாடி வந்தது. ஆனால் கேட்க நேருகையில் ஒரு பிச்சைக் காரியைப் போலக் கேவலமாக உணர்ந்தாள். மிகவும் சிரமத்துடன், ''ஒரு... ஒரு... ஓர் இருநூறு ரூபாய் தரமுடியுமா? வீட்டிற்குப் போய் எடுத்துத் தந்து விடுகிறேன்... ப்ளீஸ்...'' என்று சொல்லி முடிக்குமுன் குரல் தொண்டைக்குள்ளேயே போய்விட்டது.

விழிகளில் திரண்ட நீரை மறைக்கப் பார்வையைத் தாழ்த்தி தலை குனிந்து நின்றவளை நோக்கித் தன்னிச்சையாய் நீண்ட கைகளைச் சமயத்தில் உணர்வு பெற்று, கட்டுப்படுத்திக் கொண்டான் சிவா. பையினுள் இருந்த பர்சை எடுத்து, அவள் கேட்ட பணத்தோடு கூட

ஐம்பது ரூபாய் கொடுத்து, ''டிப்சுக்குத் தேவைப்படும்'' என்றான்.

கண்ணீரினூடே அவனை நோக்கிப் புன்னகை புரிய முயன்றபடி, ''நன்றி'' என்றாள் மாதங்கினி.

இரு கைகளையும் பின்புறமாய் இறுகக் கோத்து, ''இதை என்னிடம் கேட்க இவ்வளவு சிரமப்பட வேண்டுமா மாதங்கினி? நீ எப்போது வேண்டுமானாலும், எது வேண்டுமானாலும் என்னிடம் உரிமையோடு கேட்கலாம். நான் உன் நண்பன் என்பது எப்போதும் நினைவிருக்கட்டும்'' என்று கூறி அவளை அனுப்பி வைத்தான் அவன்.

அத்துடனும் நில்லாமல், அவர்கள் இருவரும் வெளியே வந்ததும், ஒரு டாக்சியில் ஏற்றி, டாக்சி டிரைவரிடம் முகவரியையும், அதுவரை ஆகக்கூடிய பணத்தையும் கொடுத்து வழியனுப்பினான்.

வீட்டை அடைந்ததும் மாதங்கினி நேராக அவள் அறைக்குச் சென்றாள். வழியில் பேசிக் கொண்டு நின்ற தமக்கை குடும்பத்தை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. தாயின் இடுப்பிலிருந்து, சித்தியை நோக்கிச் சிரித்துக் கொண்டு தாவிய வினுவைக் கூட அலட்சியம் செய்து அறைக்குள் சென்றவள், கட்டிலில் குப்புற விழுந்து, அழுது தீர்த்தாள்.

எதை எதையோ நினைத்துக் க்ண்ணீர் வடித்தவளின் நினைப்பு, கடைசியாகத் தமக்கையிடம் வந்து நின்றது. இந்த அக்கா ஏன் என்ன நடந்தது என்று கூடக் கேட்கமாட்டேன் என்கிறாள்? எப்படியோ போய்த் தொலையட்டும் என்பதுபோல ஏன் இருக்கிறாள்? இனியேனும் விட்டுவிடு என்று ஏன் சொல்லமாட்டேன் என்கிறாள்?



ஆனால் அவள்தான் எப்படிச் சொல்லுவாள்? கூடப் பிறந்தவளிடம் அன்று கூறிய கொடிய வார்த்தைகள் நினைவு வர அதற்கு ஒரு மூச்சு அழுதாள் மாதங்கினி.

கண்கள் சிவந்து, முகம் வீங்கிக் காலையில் எழுந்து அவள் வெளியே வந்தபோதும் மந்தாகினி எதுவும் கேட்கவில்லை. அருகில், வந்து நெற்றியைத் தொட்டுப் பார்த்துவிட்டு, ''காய்ச்சல் இல்லை. வெறும் சளிதான் போல. விக்ஸ் அல்லது அமிர்தாஞ்சன் தடவு. சரியாகப் போய்விடும்'' என்று ஆலோசனை வழங்கிவிட்டுத் தன் வேலையைப் பார்க்கப் போய்விட்டாள்.

தமக்கையின் விட்டேற்றியான போக்கு வருத்த, மீண்டும் மாதங்கினியின் விழிகளில் நீர் பெருகியது. உடம்பு சரியில்லை என்ற சாக்கில் அன்று முழுவதும் அறையைப் பூட்டிக் கொண்டு தனியே கிடந்தாள்.

ஆனால் அதுவும் தப்பாகத்தான் ஆயிற்று.

திரும்பத் திரும்ப சிவாவின் நினைவு வந்தது. அவனது கம்பீரமான தோற்றமும், கனிவான பார்வையும், யோசித்து செயல்படும் திறனும். டிப்சுக்குத் தேவைப்படும் என்று அவள் கேட்பதற்கு மேலாக ஐம்பது ரூபாய் கொடுத்ததும், டாக்சி பிடித்து, அதற்குப் பணமும் கொடுத்து அனுப்பியதும், 'நண்பன்' என்றதும் மீண்டும் மீண்டும் மனதில் படமாக ஓடியது.

இந்த 'நண்பன்' அன்பனாக இருந்திருக்கக்கூடும் என்று எண்ணும்போது உலகில் உள்ள அனைத்தையும் இழந்துவிட்டது போலத் தவிப்பு உண்டாயிற்று.

அவன் அப்படி யோசித்து செய்கையில், தானும் பணம் கொண்டு வராமல், கூட வந்தவளிடம் இருக்கிறதா என்றும் தெரிந்து கொள்ளாமல் விலை உயர்ந்த உணவு வகைகளை வருவித்து, விலாப்புடைக்க உண்டுவிட்டு, மேற்கொண்டு

'யாமறியோம் பராபரமே' என்பதுபோல் சாய்ந்து கிடந்த சீனுவின் பொறுப்பற்ற தன்மையை எண்ணுகையில் அவளுக்கு நெஞ்சு கனன்றது.

அவனை நம்பமுடியாது, நம்பமுடியாது என்று அக்கா முட்டிக் கொண்டாளே! என்ன மாதிரி எடுத்தெறிந்து பதில் சொன்னாள். அவளை மடக்கி விட்டதாகக் கர்வம் வேறு! இதற்கெல்லாம் தண்டனை அனுபவித்துத் தானே ஆக வேண்டும்?

அதுதான் 'நுணலும் தன்வாயால் கெடும்' என்பது போல சிவா காது கேட்க சீனிவாசனை மணக்கப் போவதாக அறிவித்த பிறகு அதிலிருந்து அவளுக்கு மீட்சி ஏது? இன்று மனம் மாறிவிட்டதாகச் சொன்னால் மட்டும் 'நண்பன்' 'அன்பனாகி' விடப்போகிறானா என்ன? நிச்சயமாக இல்லை. யோசிக்கும்போதே அவளுக்கு உள்ளே திக்கென்றது. அந்த 'நண்பன்' 'அன்பனாகி' விட வேண்டும் என்று அவள் ஆசைப்படுகிறாள்! வெறும் சாதாரண ஆசை அல்ல. அப்படி மாறுவதற்காக உயிரைக் கொடுக்கவும் தயார் என்பது போலான தீவிரமான ஆசை! இதற்கு என்ன அர்த்தம்!

அர்த்தம் எளிதாகவே புரிபட்டது. ஆனால் ஒரு போதும் நிறைவேறாத விருப்பம் என்பதும் சேர்ந்தே புரிந்தது. இன்னொருவனை மணக்கப் போவதாக அறிவித்த ஒருத்தியைச் சிவா எப்படி ஏற்பான்? ஒரு போதும் மாட்டான்.

குறைந்தபட்சமாய் ஒன்றில் உறுதியோடு இருந்தாள் என்கிற மரியாதை யாவது இப்போது சிவாவுக்கு மாதங்கினியிடம் இருக்கும். அதையும் இழந்து விடக் கூடாது. அத்தோடு அவனது நட்பும் தொடரும். ஒன்றும் இல்லாததற்கு இதுவேணும் கிடைக்க வேணும் எனக்கு.



சீனிவாசனை மணந்தே ஆக வேண்டும் என்ற முடிவுக்கு மாதங்கினி வந்தாள்.

அடுத்து இருவருமாகச் சென்ற இடம் கடற்கரை.

வெளியூரில் அவளது செலவுக்கு என்று தகப்பனார் கொடுத்திருந்த பணம் கிட்டத்தட்ட காலியாகி விட்டிருந்த நிலையில், செலவு இழுக்கக் கூடிய எந்த இடத்துக்கும், சீனிவாசனோடு செல்ல அவளுக்குத் தைரியமில்லை. முன்போல அந்தப் பூங்கா செல்லவும் பயம். கடற்கரை என்றால் அங்கங்கே ஜனங்கள் இருப்பார்கள். இவனும் சைக்கிளில் வந்து, கற்பனை, கதை என்று சைக்கிளை எடுத்துக் கொண்டு ஓடிவிட முடியாது. அப்படியே அவன் கிளம்பினாலும், மார்தங்கினியும் கூடவே நடந்துவிட முடியும்.

எனவே தான் மாதங்கினி, கடற்கரையைத் தேர்ந் தெடுத்தாள்.

அங்கேயும் இரண்டு பெரிய ஃபீஸ்ட் ஐஸ்க்ரீம்களை முடித்துவிட்டு (உண்டது அவன் மட்டும்தான்) சுண்டல் பாக்கெட்டுகளுடன் கடல் ஓரமாய் நடக்கலாயினர்.

சீனிவாசன் கேட்ட இருவிலை உயர்ந்த ஐஸ்கிரீம்களை வாங்க நேர்ந்தது மாதங்கினியின் மனதைப் பெரிதாகப் பாதிக்கவில்லை. பாவம். மற்றபடி இதற்கெல்லாம் அவன் எங்கே போவான்? என்று பரிதாபம்தான்.

ஆனால் கடற்கரை வந்து சேருமுன், ஆட்டோவிலேயே அவளது அமைதி - மிகவும் முயன்று வரவழைத்திருந்த மன அமைதி கெட்டுவிட்டது.

அன்று, ஓட்டலில் உட்கார இடம் தந்ததற்கான நன்றிக்கதையை சீனிவாசன் எழுதி விட்டானாம். அதை வாசித்துக் காட்டுகிறேன் என்று வழி முழுவதும் ஒவ்வொரு வரியையும் இரண்டு தரம் அவன் வாசிக்கவும் அவளுக்குத்

தலையை பிய்த்துக் கொள்ளலாம்போல இருந்தது.

பாடலைப் பொறுத்த வரையில் மந்தாகினி ஏதேனும் பொருள் குற்றம், சொற் குற்றம் என்று கண்டு பிடிக்கக்கூடும். ஆனால் மாதங்கினிக்கு அப்படி எதும் தெரியவில்லை. பாடல் நன்றாக இருப்பது போலத்தான் தோன்றியது. ஆனால், 'சிவா, 'என் தலைவா' என்று தொடங்கிய முதலடியிலிருந்து சிவ தரிசனமின்றி, நான் உயிர் வாழேன் தேவா' என்று முடித்த ஈற்றடி வரை சீனிவாசன் தாராளமாக அள்ளித் தெளித்திருந்த சிவாவின் பெயர்தான் அவளைப் பெரிதும் பாதித்தது.

சீனிவாசன் கேட்டதை வாங்கிக் கொடுத்து, அவன் நடக்கையில் அவனோடு நடந்து, அவன் உட்கார்ந்தபோது தானும் உட்கார்ந்து, ஓர் இயந்திரம்போல அரை உணர்வோடு செயல்பட்டாளே தவிர, அவளது மனம் தனியாகத்தன் இழப்பிலேயேதான் உழன்று கொண்டு இருந்தது.

ஐயோ! என்ன பிழை செய்து விட்டோம்! மீள முடியாத சிக்கலில் மாட்டிக் கொண்டோமே என்று தன் போக்கில் தவித்துக் கொண்டிருந்தவளுக்கு உறைத்தது.

சிவாவை மணப்பது இனி அவளுக்கு எட்டாக் கனியாக - இயலாததாக இருக்கலாம். ஆனால் அவளது மதிப்பு மரியாதைக்காகக் கூட இன்னொருவனை மணப்பதும், அவளுக்கு முடியாத காரியம்தான். அவன் யாராக இருந்தாலும் சரிதான். இந்த சீனிவாசன் என்றாலும் அப்படித்தான்.

உன்னை மணப்பதற்கில்லை என்று இவனிடமும், திருமணமே செய்துக் கொள்ளப் போவது இல்லை என்று அப்பாவிடமும் எப்படிச் சொல்வது என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, ''ஆழ்கடலின் அடியிலோ சிப்பியிலே



முத்துக்கள், அலைகளின் உச்சியிலோ அம்புலியின் வெள்ளி முத்தங்கள்... 'ஆகாகா! பிரமாதமில்லை!'' என்று சீனிவாசனின் குரலில் விழிப்புற்று நிமிர்ந்தவள் திகைத்தாள்.

மெய்யாகவும் நிலவு உயர்ந்து அலைகளின் மேல் வெள்ளி போல் பளபளக்கும் அளவு இரவாகி விட்டிருந்தது. அத்தோடு ஆள் நடமாட்டம் இல்லாத இவ்வளவு ஒதுக்குப்புறத்துக்கு எப்படி வந்தாள்?

சுற்றுமுற்றும் பார்த்தவளுக்கு உள்ளூரக் குளிர் பிறந்தது.

தூரமாய் படுத்துக் கிடந்த ஓர் ஆள், இன்னொரு பக்கமாக நடந்து வந்து கொண்டிருந்த சிலர் தவிர யாரும் இல்லை.

சே. ஆபத்தை வாவா என்று அழைப்பதுபோல இது என்ன மடத்தனம். அவசரமாக எழுந்து மணலைத் தட்டியபடி, ''கிளம்புங்கள் சீனிவாசன். ரொம்பவும் நேரமாகிவிட்டது. ஆள் நடமாட்டமும் ஓய்ந்து விட்டது. இனி இங்கே இருப்பது நல்லதல்ல. எழுந்திருங்கள்'' என்று அவனைக் கிளப்ப முயன்றாள்.

ஆனால் சீனிவாசன் சற்றும் அசையவில்லை. ''பொறு மாதங்கினி. இந்த சிலுசிலு தென்றல் காற்றும், நிலவும், கடலும், அருகிலே அழகுத் தேவதையாக நீயும். ஆகா! கவிதைபாட இதைவிடச் சிறந்த சூழ்நிலை எங்கே கிடைக்கும்? உட்கார்... இன்னும் கொஞ்ச நேரம் இங்கேயே இருந்து விட்டுப் போகலாம்.'' என்றான்.

''ஆமாம் பொண்ணு. நீ கொஞ்ச நேரம் இங்கேயே இரு. இந்தப் பயல் மட்டும் போகட்டும்'' என்று ஒரு முரட்டுக் குரல் கூறவும் அச்சத்துடன் திரும்பிப் பார்த்தாள் மாதங்கினி.

அந்தப் பக்கமாய் நடந்து வந்து கொண்டு இருந்தவர்கள்தான். சற்றுத் தொலைவில் பார்க்கையில்

சாதாரணமாகத் தெரிந்தவர்கள் இப்போது முண்டா பனியனும் மடித்துக் கட்டிய லுங்கியுமாகப் பயங்கரமாகத் தோற்றமளித்தார்கள்.

சில வினாடிகள், மாதங்கினி பயத்தில் உறைந்து நின்றாள். ஏதேதோ சினிமா படங்களில் பார்த்தது நினைவு வந்து அவளது வயிற்றைக் கலக்கின. அப்படியும் நடக்கக் கூடுமா? இல்லை இல்லை. அப்படியெல்லாம் சினிமாக்களில்தான் நடக்கும். வாழ்க்கையில் அல்ல என்று ஒருவாறு திடப்படுத்திக் கொள்ள முயன்றும் அச்சம் அகல மறுத்தது. அதை வெளிக்காட்டிக் கொள்ளாதிருக்கப் பிரயாசைப்பட்டபடி, ''எழுந்திருங்கள் சீனிவாசன் நான் சீக்கிரம் வீட்டுக்குப் போக வேண்டும்'' என்றாள் குரல் நடுங்க.

''அட, பொண்ணு படா டாலடிக்குதுப்பா'' என்று சிரித்தான் ஒருவன். சிரித்துவிட்டு, ''இந்தாடி சொல்ற பேச்சு காதுல வுளுலை? உகரோடு திரும்பிப் போவணும்னா மருவாதியா சொன்னதைக் கேளு'' என்று மிரட்டினான்.

அடுத்தவன் சீனிவாசனிடம் திரும்பி, ''டேய், நீ ஏன்டா, நிக்கிற? ஓடுடா... நில்லு ஒடு முன்னே ஒரு பேச்சு கேட்டுப்போ. அங்கனே போய் யாராச்சும் ஆளைக் கீளைக் கூட்டியாந்த, அவ்ளோதான் நீ. கீசிருவோம். அப்புறமா, உன்னைத் துண்டு துண்டாத்தாண்டா பொறுக்கணும்.'' என்று அவனை அச்சுறுத்தினான்.

ஒருவாறு விபரீதம் புரிந்து, எழுந்த சீனிவாசன், முதலில் வீரமாகத்தான் பேசினான். ''கண்ணகி சிலை இருக்கும் கடற்கரையில் கன்னியைக் கற்பழிப்பதா? கூடாது. கொஞ்சமும் நியாயமில்லை. ஊகூம் மரியாதையாக எங்களைப் போக விடுங்கள்'' என்று அதட்டினான்.



ஆனால், ''மரியாதையாவா? இந்தாடா, முதல் மரியாதை?'' என்று எதிர்பாராமல் ஒருவன் முகத்தில் குத்திவிட, ''அய்யோ!'' என்று கன்னத்தைப் பிடித்தபடி தொப்பெனக் கீழே விழுந்தான் சீனிவாசன்.

குத்தின வேகத்தில் உதடு கிழிந்து ரத்தம் கசிந்திருக்க வேண்டும். தொட்டுப் பார்த்துவிட்டு, ''அய்யோம்மா ரத்தம்! அய்யய்யோ! என் ரத்தம்!'' புலம்பி அழத் தொடங்கி விட்டான்.

''ஆமாண்டா, உன் ரத்தம்தான். இதுக்கு மேல ஒரு மினிட். இங்கே இருந்தியான்னா போவப் போறது உன் உயிர்!'' என்று மிரட்டினான் இன்னொரு முரடன்.

''உயிரா...! அய்யோ! அய்யய்யோ! அப்புறம் நான் எப்படிக் கவிதை எழுதுவது? எப்படிப் புகழ் பெறுவது? மாதங்கினி, என்னை மன்னித்து விடம்மா. என்னைக் காப்பாற்ற இனி வழியில்லை...! என்றவன், அந்த மூன்று முரடர்களையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு, ''ஊகூம்! உன்னை காக்க இனி முடியவே முடியாது. மூன்று பேரால் கற்பழிக்கப்பட்ட பிறகு, அதற்கு மேல் நீ உயிர் வாழ்வதும் சரியில்லை. எனவே சாவு ஒன்றுதான் இனி உனக்கு மீந்திருக்கும் வழி? அதனால், என் கண்மணியே, ஆறாத துயரத்துடன் உன்னிடம் நான் கடைசி விடை பெற்றுக் கொள்கிறேன். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். உனக்கு நினைவு அஞ்சலியாக மாபெரும் துயரக் காவியம் ஒன்று எழுதுவேன். இது சத்தியம். கடற்கரையில் கற்பழிக்கப்பட்ட கன்னியின் கண்ணீர்க் கதை என்று... ஆகா! ககககக என்று தலைப்பிலேயே மோனை நயம் எப்படித் துள்ளி விளையாடுகிறது, பாத்தியா என் கண்ணே'' என்று சுய ரசிப்பில் வேறு இறங்கினான்.

சீனிவாசனின் உணர்ச்சிகரமான பேச்சை சற்று நேரம் வேடிக்கை பார்த்த முரடர்களுக்கு அது அலுத்துப் போய் விட, ''அட எவண்டா இவன்? போடான்னா வளவளான்னு பேசிக்கிட்டு... கிட்டா, அவனுக்கு இன்னும் ரெண்டு போடு...'' என்று அவர்களில் ஒருவன் மற்றவனை உசுப்ப அதற்குமேல் நில்லாமல் ஓட்டமும் நடையுமாகக் கிளம்பி விட்டான் சீனிவாசன்.

'இவனை வாழ்க்கைத் துணையாக நம்ப முடியா தும்மா!

எத்தனை சத்தியமான வார்த்தை!

ஆனால், அது முழுமையாகப் புரிகிற வேளை காலம் கடந்ததாகிவிடுமா?

முருகா...

சீனிவாசன் ஒருவாறு விலகிச் செல்லவும் மூன்று அயோக்கியர்களும் மாதங்கினியிடம் திரும்பினர். ''இந்தாடி பொண்ணு மருவாதியா நீ மாட்டிக்கிட்டிருக்கிற நகைகளைக் கழட்டித் தந்திட்டு, எங்ககூட ஒத்துழைச்சியானா உனக்கு நல்லது. அல்லாட்டி உனக்குத்தான் நோவு. உம் கழட்டு'' என்றபடி அவர்களில் ஒருவன் அவளை நெருங்கத் தொடங்கினான்.



# 8

அந்த மூன்று அயோக்கியர்களுமாகச் சீனிவாசனை விரட்டுவதில் ஈடுபட்டிருந்த நேரத்தில், உச்சி முதல் உள்ளங்கால் வரை பதறிய அந்த வேளையிலும் மாதங்கினி வெறுமனே பார்த்துக் கொண்டு நிற்கவில்லை. அய்யோ, நம் தலைவிதி இப்படியா என்று இடிந்துபோய் அசையாமல் சும்மா நின்றுவிடவும் இல்லை.

அவர்களது கவனத்தை ஈர்க்காத வகையில், உடல் அசையாமல், ரஷ்ய நடன பாணியில் பாதங்களை மட்டும் பக்கவாட்டில் அசைத்து அசைத்து, அவர்களை விட்டு விலகி ஒருபுறமாய் நகர்ந்து கொண்டே இருந்தாள்.

கூடுதலாகக் கொஞ்ச தூரம் இடைவெளி கிடைத்தால், மூச்சைப் பிடித்துக் கொண்டு வேகமாக ஓடித் தப்பிக்கலாம். எப்படியாவது இவர்கள் கையில் அகப்படாமல், விளக்கொளி இருக்கும் இடத்தை எட்டிவிட்டால், அங்கே துணிவுள்ளவர்கள் யாராவது இருந்து, அவளைக் காப்பாற்றி விடமாட்டார்களா? அங்கே, காவல் துறையினர்கூட இருக்கலாம். இருப்பார்கள். அவர்கள் அவளைக் காப்பாற்றுவார்கள்.

அதுவரை, அந்த இடத்தை அடையும் வரை இவர்களிடம் மாட்டிக் கொள்ளாமல் இருக்க முயற்சி செய்ய வேண்டும். அந்த முயற்சியில் மூச்சடைத்து உயிர்

போனாலும் பரவாயில்லை. உயிரோடு இவர்கள் கையில் சிக்கிவிடக்கூடாது என்ற உறுதி அவளுக்கு.

மெல்ல நகர்ந்ததில் அப்போது வெறும் ஓர் எட்டடி தூரமே அவளுக்கு கிடைத்திருந்தது.

சீனிவாசன் மட்டும் இன்னும் கொஞ்ச நேரம் தாக்குப்பிடித்திருந்தால், அவளுக்கு இன்னும் கூடுதலாகக் கொஞ்ச தூரம் கிடைத்திருக்கும். ஆனால் அந்தக் கோழை, ஒரு குத்துக்குப் பயந்து ஓடிவிட்டானே! வெறும் பதர்! இந்த அழகில் கககககவென்று மோனை அழகாம்! பெருமை பாராட்டுகிற நேரத்தைப் பார்! பாவி! போகட்டும். எப்படியோ போய் தொலையட்டும். இப்போது இதையெல்லாம் எண்ணிப் பார்ப்பதில் விரயமாக்க அவளுக்கு நேரம் கிடையாது.

ஒரே தீவிரமாய்த் தன் வேலையில் ஈடுபட்டிருந்த மாதங்கினி, ஒரு தடியன் அவள் புறமாய் ஓர் அடி எடுத்து வைக்கவும், கிடைத்த தூரம் போதும் என்று, விளக்குகள் ஒளிர்ந்த பகுதியைக் குறி வைத்துக் கண்மண் தெரியாமல் ஓடத் தொடங்கினாள்.

''ஓடுவியா? பொட்டக் கழுத, இந்த இடத்திலே அப்படி எங்களை மீறி எங்கடி ஓடிருவ? பிடிங்கடா, நாயை...'' என்றபடி மூவரும் அவளை விரட்டலாயினர்.

மாதங்கினி செய்தது பெருமுயற்சி. அவளது மெல்லிய மேனியின் அதிலும் சில தினங்களாகச் சரியாக உண்ணவோ உறங்கவோ முடியாமல் வலுக்குன்றியிருந்த உடலின் சக்திக்குப் பன் மடங்கு மீறிய அளவுதான். ஆனால் அதற்கும் ஒரு எல்லை இருந்தது.



பின்புறம் அந்த முரடர்களின் காலடி ஓசை நெருங்குவதை உணர்ந்து உண்டான பதற்றமும், கால் புதையும் மணலும் சேர்ந்து கொள்ள, ஒரு தரம் தடுமாறி விழுந்தாள்.

அவளது உயிரை - அதைவிட மேலான மானத்தைக் காக்கக்கூடிய பொன்னான வினாடிகள்!

''ஐயோ' என்று பதறிக் கொண்டு அவள் எழுந்தபோது ஒருகரம் அவளது தோளைப் பற்றிவிட்டது.

பற்றிய கரத்திலிருந்து விடுபட முழு மூச்சுடன் போராடியவள், ''மாதங்கினி, நான் தான்'' என்ற குரல்கேட்டு, நம்ப மாட்டாமல் பிரமித்தாள்...

மெய்யாகவே சிவனேசன்தான்!

'ஆதிமூலமே என்றதும் காக்கச் சென்ற நாராயண மூர்த்தியாய் வந்து விட்டான்!'

அச்சம் பயம் அத்தனையும் ஒழிய அவன் மார்பில் ஒண்டியவள், உடனே விறைத்தாள்.

இவன் ஒருவன். வருகிறவர்கள் மூவராயிற்றே!

மீண்டும் பதறிவிட பயத்துடன் மாதங்கினி திரும்பிப் பார்த்தபோது, அருகில் வந்துவிட்ட அந்த முரடர்களும் நின்றிருந்தனர்.

மாதங்கினியின் எண்ணத்தையே பிரதிபலித்தாற்போல, ''இதப்பாரு நயினா, நாங்க மூணு பேர். நீ ஒருத்தன்தான். மரியாதியா இந்தப் பொண்ண விட்டுப்புட்டு ஓடிட்டியான உன்னை ஒண்ணும் பண்ணமாட்டோம். இல்லாகாட்டி, துண்டு துண்டா கீசிருவோம். சாக்கிரதை!'' என்று முன்பு சீனிவாசனை மிரட்டியது போலவே, ஒருமுறை வெற்றி கண்ட மிதப்பில் முரட்டுக் குரலில் உறுமினான் ஒருவன்.

ஆனால், ஒருகையால் மாதங்கினியை மீண்டும் தன் கைவளையத்துக்குள் இழுத்துக் கொண்டான் சிவா.

''ஏ...ய்'' என்று மிரட்டுவது போலக் கையை மடக்கிக் காட்டியவர்களைப் பார்த்து அழுத்தமான குரலில் நிதானமாகப் பேசினான் ''துப்பாக்கி சுடும் போட்டியில் இந்த ஆண்டு தங்க மெடல் வாங்கியவன் நான். என் கையில் இருப்பதைப் பார்த்தீர்களா? துப்பாக்கி சைலன்சர் பொருத்தியது. 'த்ரில்' படங்களில் வருகிற மாதிரி மண்ணை அள்ளிக் கண்ணில் வீசிவிட்டுத் துப்பாக்கியைப் பிடுங்கி விடலாம் என்று யாரும் அசட்டுத்தனமாய் நினைக்க வேண்டாம். யாராவது கொஞ்சம் அசைந்தாலும் ஒரு வீச்சில் மூன்று பேரையும் சுட்டு விடுவேன். புரிகிறதில்லையா?'' என்றவன், ''என்னோடு வாம்மா'' என்று பின்னோக்கி நாலு அடி நகர்ந்து, அந்த முரடர்களுக்கும் தங்களுக்கும் இடையே உள்ள தூரத்தைச் சற்று அதிகப்படுத்திக் கொண்டான்.

''ம். இது சுடுவதற்குச் சரியான தூரம். இப்போது நான் சொல்வதை நன்றாகக் கவனியுங்கள் இந்தத் துப்பாக்கியால் இப்போது உங்கள் மூன்று பேரையும் சத்தமில்லாமல் சுட்டுத் தள்ளிவிட்டு நான் போய்க் கொண்டே இருக்கலாம். நாய் நரி பிடுங்கியது போக மிச்சத்தை நாளைக்குத்தான் கண்டு பிடிப்பார்கள். அப்படிச் சுட்டு விடட்டுமா? அல்லது வந்த வழியே திரும்பி, பின்னங்கால் பிடரியில் இடிபட ஓட்டம் எடுக்கிறீர்களா? நீங்களே முடிவு செய்யலாம். மூன்று எண்ணியதும் நான் சுடத் தொடங்குவேன். ஒன்று... இ...''

அதற்கு மேல் அவன் எண்ணத் தேவை இருக்க வில்லை.



அவர்கள் வெகுதூரம் செல்லும்வரை இருவரும் அப்படியே நின்றுகொண்டிருந்தனர். சிவாவின் கதகதப் பான அணைப்பில் மாதங்கினியின் பதற்றம் மெல்ல மெல்ல மறைந்தது.

கையணைப்பிலேயே அவளை அழைத்துச் சென்று, கீழே இறக்கி நிறுத்தியிருந்த காரில் ஏற்றினான் சிவா.

ஆனால் அவனது அணைப்பு விலகியதும் மீண்டும் மாதங்கினியின் மனம் கலங்கியது. என்ன மாதிரி ஆபத்து நேர இருந்தது!

காரைக் கிளப்பிச் சற்று ஓட்டியவன், அவள் பெரிய பெரிய மூச்சுகளாக எடுப்பதையும் மூச்சுகளில் சலனம் இருப்பதையும் கவனித்து, ஓர் ஓரமாகக் காரை நிறுத்தினான்.

அவள் புறம் திரும்பி, நெற்றிக் கூந்தலை மென்மையாக விலக்கி, ''இன்னமும் பயமாக இருக்கிறதா?'' என்று வினவினான்.

அவள் தன் பெரிய விழிகளில் நீரோடு அவனை நோக்கவும், அவள் புறம் நகர்ந்து அவளைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டான். அவளுக்கு அது இதமாக இருக்கவே அப்படியே கண் மூடிக் கிடந்தாள்.

மூடிய இமைகளைத் தாண்டி வழிந்த நீரைக் கைக்குட்டையால் மெல்ல ஒற்றிவிட்டு, ''ஷ்... நான்தான் அருகிலேயே இருக்கிறேனே... பிறகென்ன பயம்?'' என்று பரிவுடன் கடிந்தான் சிவா.

''பயம்... என்று இப்போது அதிகம் இல்லை. ஆனால் அங்கே... சீனிவாசன்... அவர் எனக்கு நினைவஞ்சலி எழுதப் போகிறாராம். தனியாக அந்த மூவரோடு அவர்

மோதியிருக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் ஓடிப்போய் யாரையாவது உதவிக்கு அழைத்து வந்து என்னைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம்கூட வரவில்லையே!'' என்றவளுக்கு மீண்டும் கண்ணீர் பெருகியது.

''ஊகூம்... மறந்துவிட வேண்டும். ஒரு கெட்ட கனவாய் ஒதுக்கிவிட வேண்டும். தூக்கத்தில் கனவு காணும்போது அப்படியே நடப்பது போல் துன்பமாக இருந்தாலும் நேரம் மட்டும்தான் அதற்கு வலிமை. இல்லையா? விழித்து எழுந்ததும், 'பூ' என்று அலட்சியமாகி விடுகிறதல்லவா? அதுபோல இதுவும் முடிந்துவிட்ட ஒன்று. இனி உன்னை எந்தவிதத்திலும் பாதிக்க முடியாதது. எனவே இதையும் அப்படி ஒதுக்கி மறப்பதுதான் மேல்'' என்றான் சிவா.

''அதில்லை சிவா. இந்த சீனிவாசனைப் போய் நான் காதலிப்பதாக நினைத்தேனே.

''அது காதல் அல்ல'' என்றான் சிவா திடமான குரலில்.

ஒரு கணம் பேசாதிருந்து விட்டு, ''எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. ஆனால் அப்போது... அக்காவோடு எப்படிச் சண்டை போட்டேன்! அவ்வளவு உறுதியாக எண்ணியது எளிதாக மாறி விடுவது எப்படி சாத்தியம்?'' என்றாள் அவள் குரலில் கலக்கத்துடன்.

மெல்ல அவளது கூந்தலை வருடியபடி அவன் சொன்னான். ''அது அப்படி அல்ல, மாதங்கினி. அன்று நீ கூட்டை விட்டு அப்போதுதான் வெளிவந்த பூச்சியின் நிலையில் இருந்தாய். சுடருக்கும் பூவுக்கும் வேறுபாடு தெரியாத சின்னப்பூச்சியின் நிலை. புதிய ஒன்றைக் கண்ட



கவர்ச்சி. அந்தக் கவர்ச்சிக்கு ஒரு தனி வலிமை உண்டுதான். அந்த வேகத்தில் அவசரப்பட்டு, சுடரைத் தொட்டு மறுபடியும் பூச்சிபோல அழிகிறவர்களும் உண்டுதான். ஆனால் அந்த மோகத்தை விலக்கி உண்மை அறிந்து, நல்ல வாழ்வை அடைவது உண்மையில் சிறப்பே தவிர, அதில் மனம் உளைய ஒன்றும் கிடையாது'' என்று விளக்கினான்.

''நீங்கள் சொல்வது சரி என்றுதான் தோன்றுகிறது...''

''சரியேதான்!'' என்று அவன் அழுத்தி உரைக்கவும் ஒப்புதலாய்த் தலையாட்டினாள் அவள்.

''ஆனால் இந்த சீனிவாசனை மணப்பவள் பாவம் இல்லையா?'' என்றாள் யோசனையோடு.

ஆனால், ''அவள் சிங்க ஜாதிப் பெண்ணாக இருப்பாள்'' என்று சொல்லி அவளைத் திகைக்க வைத்தான் அவன்.

''என்னது?'' என்று எழுந்து அவன் முகத்தைப் பார்த்துக் கேட்டாள். ''சிங்க ஜாதி என்றால் என்ன?''

''சிங்கங்களின் இயல்பு உனக்குத் தெரியுமல்லவா? இரை தேடுவது, குட்டிகளை வளர்ப்பது எல்லாம் பெண் சிங்கம்தான். பெண் சிங்கம் இரை தேடிக் கொண்டு வந்து கொடுக்க, ஆண் சிங்கம் தின்றுவிட்டு தூங்கும். அப்படி ஒருத்தி அவனையும் காத்து, தானும் பிள்ளைகளுமாக நன்றாகவே வாழக்கூடும்.'' என்று சிவா விளக்கவும் மாதங்கினிக்கு ஆச்சரியமாக இருந்தது.

எல்லாவற்றுக்கும் பொருத்தமாக ஒரு விளக்கம் தர இவனால் எப்படி முடிகிறது? இவ்வளவு யோசிக்கும் திறன்

இருப்பதால்தான் ஒவ்வோர் இக்கட்டிலும் ஒவ்வொரு விதமாய் அவளைக் காப்பாற்ற அவனால் முடிந்தது போலும்!

கண்கள் மலர, அவனை நோக்கி, ''நான் இன்னமும் உங்களுக்கு நன்றி கூறவே இல்லையே. நீங்கள் மட்டும் சமயத்தில் வரவில்லை என்றால் நான் இப்போது உயிரோடு இருப்பது கூட முடியாது. இப்போது மட்டும் என்று இல்லை, எனக்கு எப்போது என்ன கஷ்டம் நேர்ந்தாலும் ஒவ்வொரு இக்கட்டிலும் நீங்கள்தான் சமயத்தில் வந்து என்னைக் காப்பாற்றி...'' என்ற மாதங்கினி சட்டென விறைத்தாள். ''ஒவ்வொரு சமயத்திலும் சரியாக நீங்கள் எப்படி வந்தீர்கள்?'' என்று சிவாவை நேராக நோக்கிக் கேட்டாள்.

அவன் பேசாதிருக்கவும், ''எங்கே போவதானாலும், போகும் இடம் சொல்லிவிட்டுப் போ என்று அக்கா திருப்பித் திருப்பிக் கேட்டதன் மர்மம் இப்போது புரிகிறது. நீங்கள் இரண்டு பேருமாக எனக்குத் தெரியாமல்...'' என்றவள் கோபத்துடன் மேலே பேசுமுன் சிவா குறுக்கிட்டான். ''நான் கேட்டுக் கொண்டதற்கு இணங்கித்தான் மந்தாகினி சிஸ்டர் அப்படிச் செய்தார்கள்.

''எனவே நீ அவர்கள்மீது கோபப்படுவது நியாயமல்ல. ஏன், சீனிவாசனோடு உன்னைத் தடையின்றி அவர்கள் வெளியே அனுப்பியதுகூட நான் சொல்லித்தான். அவனோடு நாலுநாள் அங்கங்கே போய் வந்தாலே அவன் தன்மை புரிந்து உனக்கு அவனிடம் உள்ள கவர்ச்சி விட்டுப் போய்விடும் என்பது எனக்கு நிச்சயம். அதனால் நான்தான் அவர்களிடம் அப்படி அனுப்பும்படி கேட்டுக் கொண்டேன். ஆனால் அவனை நம்பி, உன்னை அவனோடு அனுப்ப உன் அக்காவுக்குப் பயம். சீனியை நம்பி, அவனோடு



உன்னை அனுப்பிவிட்டுச் சும்மா இருப்பது பிழை என்பது எனக்கும் தெரியும். அவனால் நீ எந்த இடத்தில் எந்தச் சிக்கலில் மாட்டிக் கொள்வாயோ என்று கவலை இருக்கும்போது அதைத் தீர்க்கும் வழியையும் நான் தேடியாக வேண்டும் அல்லவா? அதனால்தான் நீ செல்லும் இடங்களை முதலிலேயே கேட்டுத் தெரிந்து கொண்டு அங்கங்கே உன்னைத் தொடர்ந்து வந்து காத்துக் கிடந்தேன். உன் பாதுகாப்புக்காக நாங்கள் இருவரும் சேர்ந்து திட்டமிட்டால் அதில் என்ன தப்பிருக்கிறது?''

''இல்லைதான்...! ஆனால்...'' நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்ள, மாதங்கினி கேட்டாள். ''அன்று பூங்கா சாலையில் வந்தது அப்படித்தான் போல..''

''உம்...'' என்றான் அவன் சுருக்கமாக.

''ஓட்டலில் உங்களோடு பேச எந்தத் தொழில் நண்பரும் வந்திருக்கவில்லை.''

''இல்லை.''

''இன்று கடற்கரையிலும்...''

''உன்னைப் பின் தொடர்ந்து வந்து, தொப்பியால் முகத்தை மறைத்தபடி படுத்துக் கிடந்தது நான்தான். இதெல்லாம் ஏன் கேட்கிறாய்?''

''அக்காவுக்கு உடன்பிறந்தவள் என்கிற அக்கறை உங்களுக்கு?'' விழிகள் விரிய அவனையே நோக்கியபடி மாதங்கினி கேட்டாள்.

இமை இடுங்க ஒரு கணம் அவளைக் கூர்ந்தவன், உடனேயே முகம் கனிய, ''என் வருங்கால மனைவியைக்

காப்பாற்றும் கடமை எனக்குத்தான் அல்லவா?'' என்றான் சிவா.

சட்டென மாதங்கினியின் முகம் பளிச்சென்று விசு விசுத்தது.

''அப்படியானால்... அப்படியானால்.. இன்னமும் உங்களுக்கு என்னைப் பிடித்திருக்கிறதா? நிஜமாகவா?'' என்று குரல் நடுங்கக் கேட்டாள்.

''பிடிக்கிறதாவா? உன் அக்காவும் அத்தானும் நான் நல்லவன் என்று என்மேல் முழு நம்பிக்கை வைத்திருக் கிறார்கள் என்பதற்காகப் பார்க்க வேண்டியிருக்கிறது. இல்லையென்றால், இப்போதே உன்னை என் வீட்டிற்கு அழைத்துப் போய், எவ்வளவு பிடித்திருக்கிறது என்று காட்டி விடுவேன்'' என்று கூறி அவளை ஒரு பார்வை பார்த்தான் சிவனேசன்.

குங்கும நிறம் கொண்டாள் மாதங்கினி.

❋